தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

Best copy available.

பனிமண்டலப் பாரதிதாசன்

புரட்சிக் கவிஞன் புஷ்கின் 'என் 'தோழனான கவிஞனுக்கு...'என்ற கவிதையைப் புகழ்பெற்ற 'ஐரோப்பிய தூதுவன்' என்ற பத்திரிகையில் எழுதினான். அதுவே அவனைக் கவிஞன் என விளம்பரப்படுத்த உதவியது.

1817-ல் பள்ளிப் படிப்பு முடிந்ததும் புஷ்கின் ஜார் அரசாங்கத்தில் வேலையிலமர்ந்தான். தனக்கு விருப்பமில்லாத அந்த வேலையில் மனமின்றி வேலை செய்தான் அவன். அப்பொழுது அவன் 'நலனைக் கவனிப்போர் சங்க'த்தில் உறுப்பினனாகச் சேர்ந்தான். அங்கே புரட்சி வாதிகள் பலர் அவனுக்கு நண்பராயினர். எனவே'சாதாரணக்' கவிஞன் புஷ்கின் புரட்சிக் கவிஞனாக உருவெடுத்து 'விடுதலைக்கு......' என்ற கவிதையை எழுதினான். அதில் அவன், 'நாங்கள் விடுதலைக்காக ஏங்கித் திரிகிறோம். வாலிபர்களின் இன்பக்கனவு எங்களின் விடுதலை வேட்கை...ரஷ்ய பூமியில் அழிவைத் தேடி ஓடும் ஆதிக்க வர்க்கத்துக்குக் கல்லறை கட்டுவோம். அதன்மேல் புரட்சி வீரர்களான நமது பெயர்களைப் பொறிப்போம்...' என்று குறிப்பிட்டான். இதுவே அவனது பின்னாள் புரட்சி எண்ணங்களுக்கு கால்கோள்விழாவாக அமைந்தது. பிறகு அவன் 'நாட்டுப்புறத்தில்...' என்ற நிலவுடமையாளரின் கொடுமையை விளக்கும் கவிதையை எழுதி வெளியிட்டான்.

இந்தக் கவிதைகள் புரட்சி வீரர்களின் 'விடுதலை கீதங்'களாக விளங்கின. அவர்களின் வாய்கள் முணுமுணுக்காத வரிகளே அவற்றில் இல்லை. ஆயிரக்கணக்கான இந்தப் பாடல்களின் பிரதிகள் நாடெங்கும் பரவின. அங்கிங்கெனாதபடி எங்கும்நிறை நாதமாக ரஷ்யா முழுவதும் 'உலா' வந்தன இந்தப் பாடல்கள். புஷ்கினதுகவிதைகளின் முழக்கம் ஆட்சி பீடத்தின் மூடிய கதவுகளைத் தட்டியது. 1820-ல் சர்க்காரின் தலைமை பீடத்துக்கு அவனது கவிதை நகல் கிடைத்தது காரணமாக அவனுக்குத் தென் ரஷ்யாவிலுள்ள காகஸ்ஸ் மாகாணத்திற்கு மாற்றல் உத்தரவுகிடைத்தது. தனதுஅருமை நண்பர்களையும் புரட்சி வாதிகளையும் வருத்தத்துடன் பிரிந்து அந்த நேரத்தில் வெளிவந்த அவனது முதல் நூலான 'ரஷ்லனும் லுட்மிலாவும்'என்ற கவிதைக் கதையைப் பற்றி வாசகர்கள் கூறும் பாராட்டுரைகளைக் கேட்க முடியாத காகஸஸ் மாகாணத்திற்குச் சென்றான் அவன். இயற்கை எழிலில் பெரும் பகுதியைத் தனதுடமையாகக் கொண்டிருந்த காகஸஸ் பகுதி பின்னால் எழுதிய கவிதைகளுக்கு இயற்கை வழிகாட்டியாய் அமைந்தது. அவன் அங்கிருந்து கிரீமியாவிற்கு மாற்றப்பட்டான். அங்கேதான் புஷ்கின் பெருங்கவிஞன் பைரனது நூல்களைப்படித்து அவனோடு நண்பனானான். இதையும்அவனது புரட்சி நண்பர்களையும் எண்ணிய ஆட்சிபீடம் அவனை அங்கிருந்து மாற்றி அவனது சொந்தக் கிராமத்தைவிட்டு இரண்டு ஆண்டுகள் அவன் வெளியே வரக்கூடாது எனத் தண்டனை விதித்தது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலேதான் நாம் முதலில் குறிப்பிட்ட அவனது உயர்ந்த காவியமான 'இவ்ஜினி ஒனிஜின்', மற்றொன்றான நாடோடிகளின் பண்பைக் கூறி நாகரிக மனிதக் கூட்டத்துக்கு அறைகூவல் விடும்'ஜிப்ஸிஸ்,' சரித்திரக் கவிதை 'போரிஸ் ஸ்கூடுனவ்' முதலிய புகழ்பெற்ற நூல்களை எழுதிக் குவித்தான் புஷ்கின். அந்த இரண்டாண்டுச் 'சிறை' வாழ்வு இந்த நூல்களை மட்டுமல்ல அவனையே உயிருடன் தந்தது என்றால் தவறாகாது. ஏனெனில், அப்பொழுது ரஷ்யாவில், 1825-ல் டிசம்பர் புரட்சி எனும் மாபெரும் புரட்சி மன்னனை எதிர்த்து ஆவேசக்காரர்கள் பலரால் நடத்தப்பட்டது. அதில் சம்பந்தப்பட்ட 120 பேர் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டனர். பலர் தூக்கிலிடப்பட்டனர். கிராமச் சிறை வாழ்வில் இல்லையானால் புரட்சி வாதிகளோடு தொடர்பு

ப. புகழேந்தி

கொண்ட புஷ்கின் நிச்சயமாகப் புரட்சியில் கலந்து தண்டனை பெற்றிருப்பான். புரட்சியின் தோல்வி தெரிந்ததும் தன்னிடமிருந்த அத்தகைய ஏடுகளை அழித்துவிட்ட அவனை ஆட்சியாளர் எதுவும் செய்யமுடியவில்லை.

திடீரென 1826 டிசம்பர் ஒரு நாளில் ஜார்மன்னனிடமிருந்து அழைப்பு வந்தது புஷ்கினுக்கு. யாரை ஒழிப்பதற்காகத் தன்னுடைய கவிதைகளைப் பயன்படுத்தினானோ அதே ஜார், தன்னை அழைப்பதை எண்ணித் திகைத்த அவன் பரிதாபத்திற்குரிய தோற்றத்தோடு அங்கு சென்றான். அவன் நினைத்ததற்கு மாறான நிகழ்ச்சி அங்கே நடந்தது. புரட்சிக்கவிஞனை அவனுக்கு வசதிகள் பலவற்றைச் செய்து தந்தால் தனக்குப் பின்னணி பாடுபவனாக அவன் அமைந்துவிடுவான் எனத் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்ட ஜார் புஷ்கினை அரசாங்கக் கவிஞனாக நியமித்தான். புஷ்கின் புரட்சிக்கவிஞனாகவே யிருந்தான். ஆடம்பரக் கவிஞனாகவோ, அவசியமற்ற கவி பாடுபவனாகவோ அவன் ஆகிவிடவில்லை. மன்னனின் மணிமுடிக்குத் தலைவணங்கும் எண்ணம் அவனுக்கு வரவே யில்லை.

அரசாங்கக் கவிஞனாக அலுவல் புரிந்தபோதுதான் புஷ்கினின் வாழ்வில் காதல் குறுக்கிட்டது. நாடலியா காஞ்சாரோவா எனபவள் எழிலரசி. சிற்பி செதுக்காத பொற்சிலையான அவளது மான் விழியும், தேனெனத் தித்திக்கும் வாய்மொழியும், மின்னல் இடையும் பார்ப்போரின் விழிகளைப் பறித்துப்போகும். தளிர்க்கரங்களும், தண்டு நிகர் கால்களும் பெற்ற அவளது காதலனாகவேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் வாராமற் போகாது. அத்தகைய அழகியைக் கவிஞன் புஷ்கின் காதலித்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. மூன்று ஆண்டுகள் அவனது காதலை ஏற்க மறுத்துப் போக்குக் காட்டி இறுதியில் ஒப்புக்கொண்ட அவளை, 1831-ல் தனது முப்பத்தி இரண்டாம் வயதில் வாழ்க்கைத் துணைவியாக்கினான் அவன். தனது காதலணங்கைக் கைப்பிடித்ததும் விண்ணுக்கு உயர்ந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தான் அவன். ஆனால் அவனது நினைப்புப்படி இல்லை அவள். அற்புதக் கவி மன்னனான அவனுக்கு ஏற்ற மனையாட்டியாக அவள் அமைந்திருக்கவில்லை. குடிப்பது கும்மாளமடிப்பது இவையே அவளுக்கு இன்பமளித்தன. ஏராளமான பணத்தைச் செலவிட்டு டாம்பீகமாக வாழ்ந்த அந்த அறிவு மழுங்கியவள், பிரபுக்கள் பலரோடு 'உறவு' கொள்ளத் தொடங்கி விட்டாள். ஜார் மன்னனுக்கும் அவளுக்கும்கூடத் தொடர்பு உண்டு என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளப்பட்டது. இந்தச் சேதிகள் கொஞ்சங் கொஞ்சமாக வெளிவந்து, இறுதியில் தனது பெயருக்கு இழிவு வந்துவிடக் கூடாதே என அஞ்சினான் அவன். எனினும் அவள்மீது தான் வைத்த அன்பை மட்டும் அவன் குறைத்துக் கொள்ள எண்ணியதுகூட இல்லை. அவளைக் கண்டிக்கவுமில்லை. ஆனால் இந்தப் போக்கை நெடுநாட்கள் சகித்துக்கொள்ளும் நினைப்பு வரவில்லை அவனுக்கு. எனவே, பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த தாந்தே என்ற அவனது மனைவியின் காதலனுக்கும் புஷ்கினுக்கும் சண்டை நடந்தது. 1837 ஜனவரி 28-ம் நாள் இருவரும் பீட்டர்ஸ்பர்க்கின் அருகிலுள்ள ஒரு வனத்தில்துப்பாக்கிகளுடன் சந்தித்தனர். சண்டையில் சுடப்பட்டு பரிதாபமான நிலையில் வீட்டுக்குத் தூக்கிச் செல்லப்பட்ட புஷ்கின் இரண்டு நாட்களுக்குப்பின் இறந்தான். உணர்ச்சி மிக்க கவிதைகளை உலகுக்கு அளித்த அவனது புரட்சி உள்ளம் அமைதியடைந்துவிட்டது. அப்பொழுது அவனுக்கு முப்பத்தெட்டே வயது. அவனது மறைவுக்காக ஆட்சியாளர் மகிழ்ந்தாலும் ஆயிரமாயிரம் ஏழைகளும், புரட்சி

— 10-ம் பக்கம் —

'புஷ்கின் புகழ்பெற்ற கவிஞன்-புரட்சிக் கவிஞன்' என்றுதான் தமிழ் மக்களில் படித்தவர்கள் அறிவர். ஆனால் புஷ்கின் புகழ் பரவியது எங்ஙனம் என்பதை அறிந்தோர் மிகச் சிலரே.

இங்கே புஷ்கினின் புகழ் முத்துக்களை ஆராய்கிறார் தோழர் ப. புகழேந்தி. இவர் நெல்லை மாவட்டத்தில் இயக்கம் வளர்க்கும் அடலேறுகளில் முன்னணியில் நிற்பவர். பண்பட்ட எழுத்தாளர். அன்னவரின் கவிதை விமர்சனத்திற்கு இந்தக் கட்டுரை சான்று சொல்கிறது.

★ ★ ★ ★

பொடி வைக்கும் பெரியாரும்......புன் சிரிப்பு......வெடி வைக்கும் அண்ணாவும்

அறிஞர் அண்ணா அவர்களும் பெரியாரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ்க் கலைக் கழகத் தோழர் சுப்பைய
அவர்கள் வீட்டில் சந்தித்தார்கள். கூட ஆச்சாரியார், ம. பொ. சி., சேதுப்பிள்ளை, நெடுஞ்செழியன் மற்றும் பல கட்சி
பிரமுகர்களும் வந்திருந்தார்கள். ''இந்தி தேவை இல்லை! ஆங்கிலமே போது மொழி'' என ஏகமனதாகத் தீர்மானித்தார்கள்

இயக்கத்தின் இதயமாம் தி. மு. கழகப் பொதுக்குழு ஜனவரி 29-ல் தில்லையிலே கூடியது. இதுவரை நடைபெற்றுள்ள எந்தப் பொதுக்குழுக் கூட்டத்திலேயும் நிகழ்ந்திராத அளவுக்கு வாதமும் பிரதிவாதமும் நடத்தி தில்லைப் பொதுக்குழு சிறப்பு எய்தியிருக்கிறது. கழகத்தின் முன்னணி வீரர்கள் மனம் விட்டுப் பேசிக்கொண்டார்கள். ஐந்து மணி நேர எண்ணப் போருக்குப் பிறகு பொதுக்குழு 'ஏகமனதாகத் தீர்மானத்தைமுடிவெடுத்தது.

பிப்ரவரித் திங்கள் இருபதாம் நாள் தமிழகம் போர்க் கொடி ஏந்தி நிற்கவேண்டும்.

தென்னாடெங்கணும் பொது வேலை நிறுத்தம் நடைபெற வேண்டும்.

கல்லூரிகள், பள்ளிகள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் கடைகள், உணவு விடுதிகள் எல்லாம் மூடப்பட வேண்டும்.

போக்கு வரத்துக்கள் செயலற்றுப் போக வேண்டும்.

— என்று ஜனவரி 27ல், சர்வ கட்சியினரும் அடங்கிய செயற்குழுவினர் அறிவித்துள்ளதற்கு·தி. மு. கழகம் தனது ஒத்துழைப்பைத் தருவதெனத் தில்லையிலே முடிவெடுத்து விட்டது.

தென்புலத்தின் ஒற்றுமையைக் கடந்த கால வரலாற்றிலே மட்டும் படித்து மகிழ்ந்திருந்த நமக்கு—அந்த நாள் இனி எந்த நாள் என ஏங்கியிருந்த நமக்கு, தமிழைப் பழிக்கின்றனரா? தாயகத்தை இகழ்கிறார்களா? தட்டிக் கேட்க ஆளில்லை என்று எண்ணமா வட புலத்தார்க்கு? புரவிப் படை போதும் அந்தப் புல்லர்களை ஒடுக்கிட! புறப்படுங்கள்! களம் புகுவோம்-என்று போர்ப்பரணி பாடித் தமிழ்த் தலைவர்கள் பாசறை அமைத்திட்ட சேதி புறநானூற்றுக் காட்சிகளை நினைவில் நிற்கும் சித்திரமாக்கிக் காட்டுகின்றது.

தனித் தனி அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டு, இன்று, பாசத்தால் ஒன்று பட்டிருக்கிறார்கள். தமிழகத்தின் ஏகோபித்த சக்தியை, அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் அதிகார வர்க்கத்தினருக்குக் காட்டச் சந்தர்ப்பம் வாய்க்காதா என்று எதிர்பார்த்திருந்தவர்கள் இதயம் பூரிக்கும் வண்ணம், கருத்து மாறுபாட்டால் பிரிக்கப்பட்டவர்கள், சதியால் துண்டிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள்-ஒருபடைக்கு-பெரும் படைக்குத் தளநாயகர்களாகிவிட்டார்கள்.

தமிழர்கள் பாடுபட்டுப் பண்படுத்தி, வாழ்வுக்கும், விளைவுக்கும் ஏற்றதாக்கிய தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும்-அங்கே பெரும்பான்மையினர் தமிழர்கள்-என்று எல்லாக் கட்சியினரும் டில்லிக்கு வேண்டுகோள் விடுத்தும் டில்லி செவி சாய்க்க மறுக்கிறது-மறுத்தே தீர்ப்புச் சொல்லிவிட்டது. தாய் நாட்டின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டுப் பிறமொழிக்காரர்களின் காலடியிலே தூக்கி எறியப்படுவதைத் தமிழர் படை எங்ஙனம் பொறுக்கும்? ஒரு காலத்தில் பொறுத்தோம்-குனிந்து கொடுத்தோம்! ஆனால் அவர்கள் நம்மை, விலை கொடுத்து வாங்கிய நிரந்தர அடிமைக் குதிரை என்று நினைக்கும் போது? சுரணை கெட்டவர்கள் தமிழர்கள், அவர்கள் சூதுக்குப் பலியாகி பழக்கப்பட்டவர்கள் என அவர்கள் கணக்குப் போடும்போது? அடங்கி இருந்த அடலேறு வம்சம், பொறுமிக்கிடந்த புலி நிகர் மாந்தர் புது வேகம் பெறத் தலைப்பட்டுவிட்டனர். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்ற போலி வேதாந்தம் படு சூரணமாகிவிட்டது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பொல்லாத சூத்திரத்தைப் பிய்த்தெறிய முனைந்துவிட்டனர் தமிழ்த் தலைவர்கள். தி. மு. க., தமிழரசுக் கழகம், பொது உடமைக்கட்சி, சோஷியலிஸ்ட்கட்சி, பிரஜா சோஷயலிஸ்ட், திராவிட பார்லிமெண்டரி, ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன், வடக்கெல்லைப் பாது காப்புக் கமிட்டி, திரு-கொச்சி இணைப்புக் கமிட்டி, எழுத்தாளர் சங்கம், நடிகர் சங்கம், புதுவை முன்னணி, நீதிக் கட்சி-தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இத்தனை கட்சியினரும் டில்லியின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்திட்ட போது அதுவும் ஒருசேர ஒரு முனையில் நின்று போர்க்குரல் எழுப்பிட நடைபோட்ட பிறகு, 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?' என்ற நமது பாட்டன் காலத்து 'நம்பிக்கை ஒலி' தென்னவர் உள்ளங்களில் மோதி எதிரொலிக்கிறது. சர்வகட்சிச் செயற்குழுவின் தலைவராக தமிழர் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட பி. டி. ராசன் அவர்கள் அமர்ந்திருக்கிறார்; செயலாளராக தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானமும் அவருக்குத்துணையாக நாம் பெற்ற செல்வம் என். வி. நடராசனும் பொதுவுடமைக் கட்சித் தலைவரான ப. ஜீவானந்தமும், சோஷியலிஸ்ட் கட்சியைச் சார்ந்த எஸ். சி. சி. அந்தோணி அவர்களும், மக்கள் சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் சுப்ரமணியமும் செயலாளர்களாக அங்கம் வகித்திருக்கிறார்கள்.

கோடிக் கணக்கான மக்களை உள்ளடங்கி இருக்கும் சக்தி பெற்ற கட்சிகள், டில்லி செங்கோட்டை அதிரும் வகையில் களத்திலே நின்று சங்கு முழங்கப் போகின்றன. தன்னால் எழுதப்பட்ட 'உலக சரித்திர'த்தில் உண்மையான தமிழர் வீரத்தை மூடி மறைத்த ஜவகர்லால் நேரு அவர்கள் தென்னாட்டின் வீரத்தையும் தீரத்தையும், விநோதக் காட்சிகளையே புசித்துக் கொண்டிருக்கும் தன்னிரு விழிகளுக்கும் விருந்தாக்கிக் கொள்ளப் போகிறார்.

ஒரு கட்சியின் எதிர்ப்புக்குரல் மட்டுமல்ல! அத்தனை கட்சியின் குரல் சேர்ந்த போர் முழக்கம்!

நேரு தர்பாரை நெடுநாட்களாக எதிர்ப்போர் மட்டுமல்ல! நேற்று வரை நேருவை நெஞ்சத்து ஓவியமாக்கிக்கொண்டோரும் இணைந்த அறப் போர்ச்சேனை.

வில்வளைத்து விரோதிகளை ஒழித்திட்ட தமிழர், நீதிக்குச் சொல் வகுத்துக் காட்டியும் 'நீ யார்' என உரைக்கும் டில்லிக்கு எதிர்முகாம் அமைத்துவிட்டனர்.

தமிழக வரலாற்றிலே ஒரு திருப்பு முனை. 'விரட்டப்படும் இனம்' என மாற்றார் நம்மீது பூசி மகிழும் களங்கம் துடைக்கப்படவேண்டும். ஆக்க சக்திகளை உருவாக்கிய தமிழர்கள் போக்கிடமின்றித் தவிக்கத்தான் வேண்டுமென்பதே, டில்லியின் எண்ணமென்றால் அந்த 'டில்லி'யின் அதிகாரங்களைக் காலுக்கடியிலே போட்டு மிதித்துத் துவைத்துச் சாக்கடையிலே வீசவேண்டும். அந்தச் சுதந்தரப் புரட்சியின் துவக்க நாளாக பிப்ரவரி இருபது அமையவேண்டும். புதுடில்லியின் செருக்கு குலையாத வாழ்வுக்குத் தன் உழைப்பையும் செல்வத்தையும் கொட்டிக் கொண்டிருக்கும் தென்னாடு பிப்ரவரி இருபதாம் நாளன்று இருண்ட வீடாக இருக்கவேண்டும். ஆம்; தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கும். கல்லூரி, பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லமாட்டார்கள். ரயில்கள் ஓடா! தெருவிலே மோட்டார்கள் ஓடா! கடைகள் மூடிக்கிடக்கும் · இது சர்வகட்சி அமைப்பின் முடிவு. அந்நிலை அனைத்து மகிழும் டில்லி சர்க்கார் சர்வகட்சிக் கூட்டணியை முறியடிக்க மிருகத்தனமான அடக்கு முறையைக் கையாளக் கூடும். தமிழரின் இரத்தத்தைச் சுவை பார்த்துப் பழக்கப்பட்ட மலபார் போலீஸ் படையை ஏவுவார்கள். சிக்கலோ தேவிகுளம், பீர்மேடு பற்றியது; ஏவப்பட இருக்கும் படையோ அந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மலபார் படை! அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. தமிழர் படை இதிலே சளைத்துவிட்டால் தர்பார் நடத்துவோர் மதம்கொண்ட யானையாகிவிடுவார்கள். எனவே, பிப்ரவரி இருபதன்று, "உயிரை எடு! மறவன் பொறுப்பான்-மானத்தைப் பழிக்காதே நாவை அறுப்பான்" என்ற நமது குலப் பெருமையை மனத்தில் கொண்டு செயலில் இறங்கவேண்டும். தி. மு. க. தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் தருவதெனத் தில்லைப் பொதுக்குழுவிலே முடிவெடுத்துவிட்டது. பொதுக்குழு அப்புதலின் சக்தியை பிப்ரவரி 20ல் தி. மு. கழகம் செயலாக்கிக் காட்டும் என்பது உறுதி.

எண்ணம்

மலர் 2 | 7-2-56 | இதழ் 34

பம்பாயில் தென்றல் ஆசிரியர்!

14-1-56 சனிக்கிழமை காலை 6 மணியளவில் கண்ணதாசனுக்கு, சந்தா குரூஸ் விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பெருவாரியான கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

15-1-56 ஞாயற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் மாதுங்கா-போதார் கல்லூரி ஹாலில் ப. தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், மத்தியக்குழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் நெல்லைச்செழியன் வரவேற்க, தோழர் எஸ். வள்ளிநாயகம் அவர்கள் சொற்பொழிவாற்றியபின், கண்ணதாசன் அவர்கள், ப.தி.மு.க. ஆற்றவேண்டிய பணி குறித்து நீண்டதோர் விளக்கவுரையாற்றினார்கள். தோழர் பொற்கோ நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

15-1-56 ஞாயிறு மாலை மாதுங்கா தி. மு. கழகத்தின் சார்பில், மாதுங்கா - ஜெயின் போர்டிங்ஹாலில் பொதுக்கூட்டம் தோழர் அன்புச்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தைத் தோழர் யோ. தர்மராசன் துவக்கி வைத்தார். தோழர் இ. எஸ். எஸ் பிச்சையா அவர்களின் சொற்பொழிவின்பின், மத்தியகுழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள்-பம்பாயில் கழகம் வளர்ந்த விதத்தை விளக்கினார்கள். கண்ணதாசன் அவர்களுக்கு மாதுங்கா தி. மு. க., ப. தி. மு. க. பொதுக்குழு, தாராவி தி. மு. க., பாண்டுப் தி. மு. க., அண்ணா சொற்பயிற்சி மன்றம், தானா தி. மு. க. ஆகிய நிறுவனங்களின் சார்பிலும், தனிப்பட்ட முறையில் தோழர் இ. எஸ். கண்ணதாசன் அவர்கட்கு, கோரேகான் தி. மு. க., காந்திவ்லீ தி. மு. க., மலாடு தி. மு. க. ஆகியவற்றின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. பின்னர் கண்ணதாசன் 'தென்னாட்டினர்க்கும் வடநாட்டவர்க்குமுள்ள வேறுபாடான பண்புகளும், பழக்க வழக்கங்களும்' என்பது பற்றியும், 'நேரு சர்க்காரின் ஆட்சி எவ்வாறுள்ளது' என்பது குறித்தும், 'பார்ப்பனர்க்கும் நமக்குமுள்ள தொடர்புகள்' பற்றியும் விரிவுரையாற்றினார்கள். கூட்டத்தில் ரூ. 8 புயல் நிதிக்காக வசூலானது. சுமார் 10 மணியளவில் கூட்டம் இனிது கலைந்தது.

17-1-56 செவ்வாய் மாலை 8 மணியளவில் கோலாபா தி. மு. க. கழகச் சார்பில் 2-வது ஆண்டுவிழா பொதுக்கூட்டம் 'காமா ஹாலில்' நடைபெற்றது. தோழர் ஜெகநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றபின் தோழர் எஸ். கே. ராஜு அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். தோழர் அன்பரசு அவர்கள் கழகக்கொடியினை ஏற்றிவைத்துக் கொடியின் குறிக்கோளை விளக்கிய பின் தோழர். கே. கே. இராமநாதன், அறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். ஆண்டறிக்கை படிக்கப்பட்ட பின்னர் தோழர் தியாகராசன் அவர்கள் 'பம்பாயில் தமிழர்கள்' என்பது பற்றிப் பேசினார்கள். கோலபா தி. மு க. சார்பிலும் காரைக்குடித் தோழர்கள் சார்பிலும் மாலைகள் அணிவிக்கப்பட்ட பின்னர் கண்ணதாசன் அவர்கள் 'கடந்த காலத்தில் தி. மு. கழகம் மேற்கொண்ட மும்முனைப் போராட்டங்களில் தோழர்கள் காத்துக்கொண்ட கண்ணியம்

அரசாண்ட தமிழனுக்கு ஆலைகளில் அவதி!

எஸ். பிச்சையா, சோமசுந்தரம், தனராஜ் ஆகியோர் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

புயல் நிவாரணத்திற்கென, தானா தி. மு. கழகம் ரூ. 40 கண்ணதாசனிடம் கொடுத்தது. பின்னர் கண்ணதாசன் அவர்கள் சுமார் 2 மணி நேரம், 'இன்றைய அரசியல் நிலையும் நமது கடமையும்' என்பது பற்றிச் சிறந்ததோர் விரிவுரையாற்றினார்கள். குறிப்பாகத் தமிழின் தனித்தன்மையையும், இந்தியை நாம் ஏற்கமுடியா நிலையினையும் விளக்கினார்கள் (விபரம் பின்). தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் பிச்சையா நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

16-1-56 திங்கள் காலை 10 மணியளவில் பம்பாய் கார்ப்பொரேஷன் நிர்வகித்து வரும் பால் பண்ணையையும் அதனை அடுத்துள்ள 'அரே காலனி' (Aeray Coloney) யையும் ஆசிரியர் கண்ணதாசன் பார்வையிட்டார். மாலை 6 மணியளவில் கோரேகான் தி. மு. கழகத்திறப்பு விழாப் பொதுக்கூட்டம், கோரேகான்- 'நவராத்திரி மண்டல்' எனுமிடத்தில் நடைபெற்றது.

பம்பாயில் பதினொன்றாம் கிளையான கோரேகான் தி. மு. கழகத்தைத் தோழர் இரா. தஞ்சைத் துரையவர்கள் துவக்கி வைத்தார்கள். தலைவர் இராமன் அவர்கள் தலைமையுரைக்குப் பின் தோழர் மு. சண்முகம் அவர்கள் "திராவிடம் ஏன் பிரிய வேண்டும்?" என்பதை விளக்கினார்கள். மத்தியக்குழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள், கோரேகானில் தி. மு. க. கிளை அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதன்பின் பற்றியும்' குறிப்பாகத் தாம் பங்கேற்ற கல்லக்குடிப் போராட்டம் பற்றியும், எடுத்துரைத்தார்கள். அண்மையில் வரவிருக்கும் மாநில மாநாடு பற்றியும் குறிப்பிட்டு அதன் 'உருவெளித் தோற்றத்' தினையும் விளக்கினார்கள். கூட்டம் சுமார் 11 மணியளவில் இனிது கலைந்தது.

18-1-56 புதன் மாலை 4 மணியளவில் கண்ணதாசன் தாராவி தி.மு.க. அலுவலகம் "திராவிட"ரகத்தைப் பார்வையிட்டார். தமிழர்கள் பெரும் பகுதியாய் வாழும் குடிசைப் பகுதிகளையும் சென்று கண்டார். மாலை 6 மணியளவில் தாராவி தி. மு. க. சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம், வ. உ. சி. திடலில் தோழர் சி. த. மு. இர. ஆரியசங்காரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் சு. தங்கவேலன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்களான எம். எஸ். கணபதி, த. மு. பொற்கோ, எஸ். தியாகராசன் ஆகியோர் உரையாற்றியபின், கண்ணதாசனுக்கு, தாராவி தி. மு. க., மத்திய கழகம், சையன் தி. மு. க., ஆமதாபாத் தி. மு. க., கொலபா தி. மு. க., மாங்கூர்டு தி. மு. க., கோரேகான் தி. மு. க., சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம், திருவள்ளுவர் கலா மன்றம், ஜோகேஸ்வரி தமிழர் மன்றம், திருமகள் நிலையம், தென்றல் நிலையம், தென்னிந்திய நடிகர் சங்கம் ஆகியவற்றின் சார்பில்கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. 'வடநாட்டில் தென்னவர் நிலையும், தென்னாட்டில் வடவர் நிலையும்' எடுத்துக்கூறி இன்னும் 10 ஆண்டுகட்குள் வெளிநாட்டில் வதியும் எல்லாத் தமிழர்களையும் திராவிடத்தில் கொண்டுவந்து காண தி. மு. க. தீவிரப் பணியாற்றி வருவதாய், தம் சொற்பொழிவில் கண்ணதாசன் குறிப்பிட்டார். தோழர் சு. தங்கவேலன் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

"திராவிட முன்னேற்றக் கழகம், முன்னர் நான் பம்பாய் வந்தக்கால் ஒரு கிளையாக விருந்து இரண்டாண்டில் இன்று பதினொரு கிளைகளாய் வளர்ந்துள்ள நிலைகண்டு மகிழ்கிறேன். திராவிடம் தீயோரின் வலைகட்குள் சிக்கிச் சீரழிந்துவிட்ட நிலையால் தமிழர்கள்-தென்னாட்டவர் தம் நாட்டிலேயே வாழும் வழியின்றிப் பிழைப்புத்தேடி இலங்கை, மலேயா, சிங்கப்பூர் எனப் பல இடங்களைத் தேடிச் செல்லவேண்டிய நிலை வந்துவிட்டது. அன்றும் சென்றான் வெளிநாடுகட்கு! ஆனால் இன்று போன்றல்ல, வாணிபம் நடத்தக்கடல்கடந்தான். கடாரம் வென்றான். இமயம் சென்றான். கொடிகளை நாட்டினான். இலங்கையை வென்றான். எட்டுத்திக்கும் புகழ்படைத்தான். தமிழன் தன் பண்டைய வரலாற்றில் எந்தப் பக்கத்திலும் காணக்கிடக்கும் தமிழன்நிலை இது. ஆனால் இன்று, தான் வென்று நின்ற இடங்களில் வாழ்வுதேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதென்றால், தமிழன் தன்னை அண்டி வந்தோரின அடிபணிந்த தன்மை கண்டு வியந்திருந்த அயல் நாட்டினர் இன்று அவர்களை ஏளனம் செய்யவும், அவர்களின் வாழ்விற்குப் பங்கம் விளைக்கவும் எழுந்துவிட்டார்களென்றால், தமிழன் தன் நிலை தவறிவிட்டான் என்பதே காரணம். தென்னகத்தில் கோட்டிக் கொடுக்கும் வரிப்பணத்தில் பெரும் பாகம் வடநாட்டிற்குச் செல்ல, மிகுந்த சிறுபாகத்தில் நமது அவசிய தேவைகளைக்கூடப் பூர்த்திசெய்ய முடியா நிலைக்கு வந்து நம்மக்கள் அவதியுறும் நேரத்தில், தனது வளங்குறைந்த உதவாக்கரை மொழியான இந்தியைத் தென்னாட்டில் புகுத்தி, தனது ஆதிக்கத்தை இன்னும் உறுதியாய் நிலைநாட்ட எல்லா ஏற்பாடுகளையும் செய்துவருகிறது வடநாட்டு ஏகாதிபத்தியம். நம்மவரிடையே சிலர் அன்றுமுதல் இன்றுவரை அடிமைப் புத்தியே மிகக்கொண்டு, தன் உடைமைகளையும் அயலார்க்குக் காட்டிக்கொடுக்கின்ற இழிபுத்தி கொண்டுள்ள காரணத்தாலேயே, ஏதோ சந்தர்ப்பவசத்தால் வீழ்ந்த தமிழன் இன்னும் தலைதூக்கித் தன் பண்டைய நிலையை எய்த இயலா நிலையிலிருக்கின்றான்.

வடவருக்கும் நமக்கும் எந்த விதத்திலும் ஒற்றுமையிருப்பதாய்க் கூறுவதற்கில்லை. நமது மொழி ஒப்பற்ற உயர்தனிச் செம்மொழி. அவனுக்கு, உருவான நல்ல இலக்கணமோ, சுவைமிக்க இலக்கியமோ இந்தியில் இல்லை. நமது திராவிட மொழிகள் நான்கும் ஒன்றையொன்று தழுவியதாய் - தொடர்புடையதாய் அமைந்துள்ளபோது இந்தியோ உள்மூச்சையே ஒரே மொத்தமாய் வெளியில் இழுத்து வரும்; நமக்கு எதிரிடையான ஒரு தன்மையாய் அமைந்துள்ளது. 'எங்கே போகிறாய்' என நாம் தமிழில் கூறுவதை மலையாளத்தில் 'எவ்விட போயி' என்றும், தெலுங்கில் 'எக்கிட போத்தாரு' என்றும், கன்னடத்தில் 'எல்லிபோத்தியா' எனவும் நமது மொழிகள் ஒன்றையொன்று இணைந்திருக்கும்போது இந்தி நமக்கெல்லாம் அப்பாற்பட்டு 'ககாங் ஜாத்தா ஹை' என மாறுபடுகிறது. இந்த மொழியை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்? தமிழில் ஒவ்வொரு எழுத்திற்கும்கூடப் பொருள் இருக்கின்றது. ஒரு எழுத்தை மட்டும் வைத்தே நமது புலவர்கள் பாடியுள்ளார்கள். 'த'கர எழுத்து மட்டுமே வருமாறு,

தாதிதூ தோதீது
தத்தைதூ தோதாது
தூதிதூ தோத்தித்த
தூததே!-தாதோத்த
துத்திதத் தாதோ!
துதித்துத்தேத் தோத்தீது
தித்தித்த தோதித் திதி.

எனக் கவி காளமேகர் பாடுமளவில் சுவை நிறைந்தது நம் தமிழ். இந்தியில் 'ஹை' தவிர வேறு ஏதாவது ஒரு எழுத்துப் பொருள் தருமா? தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் மட்டும் இந்தி அங்கு தலைநீட்ட விடமாட்டோம் என்பதை வடநாட்டார் அறிந்துகொள்ளட்டும். பொருளாதாரமானாலும், மொழியானாலும், எதிலும் ஏற்றங்காண்போம். வடநாட்டான்எண்ணுவதை நன்கு உணர்ந்துவிட்ட தென்னாட்டவர் இனி எந்த அளவிலேனும் அவனுக்குப் பணிந்துவிடாதபடி காத்துக்கொள்வதே எங்கள் இன்றையப்பணி. தமிழர்கள் ஒவ்வொருவரும் தன்மானம் எண்ணி எம்மோடு ஒத்துழைக்க முன் வருவார்களேன்றால் நிச்சயமாய் 1965-ம் ஆண்டில் நாம் கோரும் திராவிட நாட்டைப் பூரண சுதந்தர நாடாய் நாம் காணலாம். இந்தப் பம்பாய்ப் பகுதிகளில் தமிழர்கள் படும் அவதிகளைத் துடைக்க நிச்சயமாய்பல திட்டங்கள் ஏற்படும். யாவரும் தாயகம் சென்றிடலாம் எனும் நம்பிக்கை எனக்குண்டு. ஒரு குழாயினுள் 9000 கெஜம் துணியை நெய்து அடைத்துக்காட்டிய அளவிற்குக் கைத்தொழிலில் மேம்பட்ட தமிழன், இன்று ஆலைகளைத் தேடி அலைந்து திரியும் நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அண்மையில்கூடவிருக்கும் மாநில மாநாடு, வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்துகொள்வது பற்றி முடிவெடுக்கும். படிப்படியாக இனி, நாம் சுதந்தரம் பெறும் வழியைக் காணுவதிலேயே தி. மு. கழகம் தன் முயற்சியையும் செலுத்தி வருகிறது. கழகத்தில் எந்தப் பாகுபாடுமின்றி எவரும் உறுப்பினராகும் தகுதியுடைமையால் பார்ப்பனர்களும் எந்த பயமுமின்றி எம்முடன் ஒத்துழைக்க வரலாம். நிச்சயமாகத் திராவிடத்தில் மதச்சுதந்தரம் அளிக்கப்படும், இன்றிருப்பது போன்று கோவில்களால் முதலாளிகளாகும் நிலை எவருக்கும் ஏற்படாத நிலையை உருவாக்குவோமேயன்றி தனிப்பட்ட எவரின் சுதந்தரமும் பறிபோகாது என்பது மட்டும் நிச்சயம். எனவே, பம்பாயில் அமைந்துள்ள திராவிடமுன்னேற்றக் கழகத்தில் பார்ப்பனர்கள் உட்பட நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இணைந்துநின்று, தாயக விடுதலைக்காக ஆங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை அவ்வப்போது இங்கும் வடவர் மத்தியில் பிரச்சாரம் செய்து, கழக வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த பம்பாய் தி. மு. கழகத்திற்கு நன்றி கூறுகிறேன்" என்று பேச்சை முடித்தார்.

—புத்தரசு

★ சதிக்குச் சதி ★

— தமிழ்ப்பித்தன் —

வேழநாட்டு வேந்தன் வைர நெஞ்சன் அரண்மனை மாடியிலே உலவிக்கொண்டிருந்தான். அவனது உள்ளம் ஒரு வாரத்திற்கு முன் நடந்த அதிசய நிகழ்ச்சியை எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தது. தீராத தனது வயிற்று வலியைத் தீர்த்துவைத்த வைத்தியரை அவன் மனம் வாழ்த்தியது. அன்று நடந்த நிகழ்ச்சியை மீண்டும் அவன் மனக்கண் எட்டிப் பிடித்தது.

★

ஓயாத வயிற்றுவலியால் வேந்தன் வைரநெஞ்சன் சித்திரவதைப் பட்டுக்கொண்டிருந்தான். உள்ளூர் வைத்தியர்கள் - அரண்மனை வைத்தியர்கள்-வெளியூர் வைத்தியர்கள் இப்படிப் பலபேர்கள் வந்து பார்த்தனர். ஆனால், பயன் எதும் இல்லை.

ஒருநாள்...அரசவை கூட்டப்பட்டிருந்தது. வெளிநாட்டு வைத்தியர் ஒருவர் வந்திருப்பதாகவும், அவர் வேந்தனின் வயிற்றுவலியைத் தீர்த்துவிடுவதாகச் சொல்வதாகும் காவலாள் சொன்னான். வேந்தனின் ஆணைக்குப் பின்னர் வெளிநாட்டு வைத்தியர் உள்ளே நுழைந்தார். வைர நெஞ்சனைக் கண்டார். தனது வயிற்றுவலியைத் தீர்த்துவிட்டால் வேண்டிய பரிசு தருவதாக வாக்களித்தான் வேந்தன். வைத்தியரும் ஒப்புக்கொண்டார்.

அன்று, அரசவை உடனே கலைக்கப்பட்டுவிட்டது. வைத்தியர், வைர நெஞ்சனுக்கு மருந்து தந்தார். மருந்து அருந்திய ஒரு நாழிகைக்குள்ளேயே மன்னனின் ஓயாத வயிற்றுவலி குறைந்தது. சில நாழிகைக்குள் வயிற்றுவலி சிறிது கூட இல்லாமல் மறைந்தது. மன்னன் முகம் மலர, வைத்தியர் அகமும் மலர்ந்தது. மன்னன் ஆனந்தக் கூத்தாடினான். வைத்தியருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்தான். வைத்தியர் பரிசுப் பொருள்களை வாங்கிக்கொண்டு தான் தற்போது தங்கியிருக்கும் ஊரைச் சொல்லிவிட்டுச் சென்றார்.

★

"வேந்தே! தீவிரமான சிந்தனையா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் மந்திரி மார்த்தாண்டர். அவரது குறுக்கீடு கடந்த வார நிகழ்ச்சியைவிட்டு, அப்போதைய நிகழ்ச்சிக்கு மன்னனை வரச் செய்தது.

"ஆம்! வைத்தியரின் அபாரத் திறமையை எண்ணி வியக்கிறேன் அமைச்சரே!"-மன்னரின் பதில்.

மந்திரிக்கு வைத்தியர்மீது ஐயம் ஏற்பட்டதால், அவர், வைத்தியரின் திறமையைப் புகழ மறுத்தார். மாறாக ஒரு புதிரையும் கிளப்பிவிட்டார். "வேந்தே! வைத்தியன் உங்கள் நோயைக் குணப்படுத்தியிருப்பான் என்று தோன்றவில்லை! அவன் குணப்படுத்தியது தாற்காலிகமாகத்தான் என்று நான் எண்ணுகிறேன். மேலும், அவன் அம்மருந்தின்மூலம் தங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல முயற்சி செய்துவிட்டான் என்று ஐயப்படுகிறேன். அவனைப் பார்த்தால் வெளிநாட்டுக்காரன்போல் தெரியவில்லை" என்று, மந்திரி சொன்னார். வைரநெஞ்சன் இதற்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டான். மந்திரியும் சென்றுவிட்டார்.

மறுநாள்! மந்திரி சொன்னதிலே மன்னனின் மனம் ஓரளவு பாதிக்கப்பட்டுத்தான் இருந்தது. மந்திரி தொடர்ந்து மன்னனிடம் தன் கருத்தைச் சொல்லச் சொல்ல மன்னன் மனமும் மாறியது. "ஆம் ஏன் இருக்கக்கூடாது?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். மந்திரியை யோசனை கேட்டான். "இப்போது என்ன செய்யலாம்? அந்த வஞ்சக வைத்தியனை எவ்வாறு தீர்க்கலாம்? வழி சொல்லும் அமைச்சரே, வழி சொல்லும்!" என்றான் அமைச்சர் ஒரு வழி சொன்னார். "மன்னரே! வைத்தியன் இருக்கும் ஊரோ நமக்குத் தெரியும். அதனால் அவனுக்கு பேற்கொண்டும் பரிசுகளை நிறைய அனுப்பலாம். அவன் அதிசயப்பட்டுக்கொண்டே இருக்கும்படி அனுப்பலாம்" என்று சொல்லிவிட்டு, மன்னனின் காதில் ஏதோ சொன்னார்.

"ஆம்! இதுதான் சரியான வழி! இப்படிச் செய்தால்தான் அவன் சாவான்" என்று மன்னன் சொன்னான்.

அன்று மன்னரின் நோய் தீர்ந்த பத்தாம் நாள். அமைச்சரின் ஆலோசனைப்படி பரிசுப்பணம் வைத்தியரை நாடிச் சென்றுகொண்டிருந்தது. வைத்தியன் தனது குடிசைக்குள் இருந்தான். அவன் மனம் குழப்பமடைந்திருந்தது. வேந்தனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான் அவன்.

வேழநாட்டு வேந்தே!

நான் ஒரு வைத்தியன் அல்ல. ரத்தவெறி பிடித்த மனிதன். ஒரு குற்றமும் செய்யாத என் தந்தை தனஞ்சயரை நீர் கொன்றுவிட்டீர் இருபது ஆண்டுகட்குமுன்னர்! அவரது ஒரே புதல்வன்தான் நான். பழிக்குப் பழி வாங்கவேதான் நான் வைத்தியனாக வந்தேன். உம் நோயைத் தாற்காலிகமாகக் குணப்படுத்தினேன். நீர் சாப்பிட்ட மருந்து மருந்தல்ல - கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் நஞ்சு! நச்சு மனம் படைத்த உமக்கு, நாட்டு வீரன் என் தந்தையைக் காரணமில்லாமல் நயவஞ்சகமாகக் கொன்று தீர்த்த உமக்கு, நான் தந்த பரிசு நஞ்சு! இன்று பத்தாம் நாள். இன்னும் ஐந்து தினம் தான் உம் ஆயுள். இன்றிலிருந்து ஐந்தாம்நாள் நீர் உயிர்வாதைப் படுவீர். நஞ்சு உம்மைச் சித்திரவதை செய்யும். உம் உயிரைப் போக்கும். பழிக்குப் பழி வாங்கியதில் என் மனம் இப்போது எவ்வளவோ திருப்திப்படுகிறது.

இப்படிக்கு,
உம் எதிரி

கடிதத்தை எழுதிமுடித்தான். அப்போது வீரர்கள் பலர் பரிசுப் பொருள்களை எடுத்துவந்து கொண்டிருந்தார்கள். மன்னன் மீண்டும் பரிசு அனுப்பியதைக் கேட்டு எள்ளி நகையாடினான். 'ஏமாந்த மன்னன்,' 'அறிவற்ற மன்னன்' என்றெல்லாம் மன்னனை மனதிற்குள் திட்டிக்கொண்டான்.

பரிசு கொண்டுவந்த காவலர்கள் தாங்கள் கொண்டுவந்த பொருள்கள் அத்தனையையும் கீழே இறக்கி வைத்தனர். வைத்தியன் மன்னனுக்கு எழுதிய கடிதத்தைக் காவலர் தலைவன் பார்த்துவிட்டான். வைத்தியனிடம் விடைபெற்றுச் சென்றனர் காவலர்கள். ஆனால், தலைவன், வேந்தனுக்கு வைத்தியன் எழுதிய கடிதத்தையும் எடுத்து வந்துவிட்டான்.

காவலர்கள் சென்ற உடன், அரசன் மீண்டும் தனக்குத் தந்த பொக்கிஷங்களைப் பார்த்தான் வைத்தியன். ஒரு பெட்டி பளபளப்புடன் மின்னியது. அப்பெட்டியின் ஓரத்திலே வைரப்பிடி பிடிக்கப்பட்டிருந்தது. அதன் ஒளி கண்ணைப் பறித்தது. ஆவலுடன் அதைத் திறந்தான். சீறி எழுந்தது அதன் உள்ளே இருந்த விஷநாகம்! அது வைத்தியனைத் தீண்டிவிட்டது! அவ்வளவுதான்! வைத்தியன் துடித்தான். வழி யறியாமல் திண்டாடினான். மன்னருக்குத் தந்த மருந்து தவிர அவனிடம் வேறு மருந்து கிடையாது - அவனுக்குத் தெரியவும் செய்யாது. பெட்டிக்குள்ளே கடிதம் ஒன்று இருந்தது. அதைப் படித்தான்.

"ஏ! போலி வைத்தியனே!

மருந்தைக் கொடுத்து என்னைக் கொல்ல முடிவு செய்துவிட்டாய். நானும் உன்னைக் கொலை செய்ய முடிவு செய்துவிட்டேன். இக்கடிதத்தைப் படிப்பதற்கு முன்பே உன் உயிர் துடித்துக் கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். காரணம் இப்பெட்டிக்குள் இருக்கும் பாம்பின் திறமையிலே எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு!

இப்படிக்கு,
வைரநெஞ்சன்"

வைத்தியனின் ஆவி பிரிந்து கொண்டிருந்தது. வாய் நுரையைத் தள்ளியது. தான் இறந்தாலும் தன் தந்தையைப் பழிதீர்த்த மன்னனைப் பழிவாங்கிவிட்டோம் என்ற எண்ணத்தால் நிம்மதியாக உயிரைவிட்டான்.

வைத்தியனிடமிருந்து கடிதத்தை எடுத்துவந்த காவலாள், மந்திரியிடம் அதைக் கொடுத்தான். மந்திரி படித்தார்; பதறினார். மன்னர், பெட்டிக்குள் வைத்து அனுப்பிய பாம்பு இந்நேரம் வைத்தியனைக் கொன்றிருக்கும் என்பது தெரியும். மன்னரை நோக்கிச் சென்றார். மன்னர் உடல் நிலை தளர்ந்து காணப்பட்டார். உட்காரமுடியாமல் படுக்கையிலே படுத்திருந்தார். வைத்தியன் கொடுத்த நஞ்சு, தன் வேலையைச் செய்துகொண்டிருந்தது! கொஞ்சம் கொஞ்சமாக மன்னரின் உயிர் போய்க்கொண்டிருந்தது. வைத்தியன் எழுதிய கடிதத்தைக்கொண்டு வந்து தந்தார் மந்திரி. அதைப் படித்த மன்னரின் கை கால்கள் துடித்தன. 'துரோகி' என்று திட்டினார், தான் செய்த துரோகத்தை மறந்தபடி.

பதினைந்தாம் நாள்! வேந்தர் மரணப்படுக்கையில்! அவர் உயிர் மன்றுடிக்கொண்டிருந்தது. திடீரென ஒரு விக்கல்! அது அவரது உயிரையே பறித்துச் சென்றது. மன்னர் மாண்டார்.

ஒரே உள்ளங்கள் - பழிவாங்கும் உள்ளங்கள் இரண்டும் மாண்டு மடிந்தன. ★

கந்தசாமி வீவிங் பேக்டரி

லிமிடெட்

கொமாரபாளையம் P. O., ஈரோடு R. S.

★

— தயாரிப்புகள் —

உயர்ந்த ரக பெட்ஷீட்டுகள், ஜமக்காளங்கள், சில்க் ரிப்பன்கள், லினன் வேஸ்டிகள், சால்வைகள், சர்ட்டிங்குகள், பட்டுச் சேலைகள் முதலியவை

★

எங்கள் டிரேட் மார்க் - முருகன் பிராண்டு & கேடெக்ஸ்

ஆறிலொரு கடமை வாங்குவது அரசின் பண்பு. இன்றைய அரசல்ல! இது ஆறில் ஏழு கடமை வாங்கித் தொலைக்கிறது! முன்னாள் அரசு! வில்லும் புலியும் மீனும் பறந்த நல்ல காலத்து அரசு! அதிலே புலிக்கொடியோன் ஓர் இளைஞன். அவனைக் கண்டாள் ஒரு நங்கை. கண்டாள் என்றவுடனேயே பின்பகுதிதான் உங்களுக்குத் தெரியுமே! காதல் கொண்டாள்; உருகினாள்; கருகினாள்; தன் மனத்தை அவனிடம் பறிகொடுத்தாள். அதனால் அவளுடைய நாணமும் விடைபெற்றுக்கொண்டது. ஆசை அவளை உந்தி உந்தித் தள்ளியது. அதனால் 'பெண்மை நலம்' விடை பெற்றுக்கொண்டது. வளை கழலும் அளவுக்கு அவள் கை மெலிந்தது. வழக்கம்போல் காதலில் நடக்கும் எல்லாமும் நடந்தது. பாலும் கசந்தது; படுக்கை நொந்தது. கோலக்கிளி மொழியும் செவியில் குத்தலெடுத்தது. நாலு வைத்தியரும் நம்புதற்கில்லை என்றார். மேனி பசலை ஊறிப் படர்ந்தது.

இப்படியாக அவள் துடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குச் சோழன்மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதனால் அவன்மீது குற்றஞ்சாட்டவே துவங்கினாள். "அடி, தோழி! அரவகல் அல்குலாய்! ஆறிலொரு கடமைதானே மன்னர்கள் வாங்குவார்கள்! இந்தப் பொல்லாத சோழன், என் நெஞ்சு, நாணம், நலன், எல்லாவற்றையும் சேர்த்து எடுத்துக் கொண்டு விட்டானே! என்ன அக்ரமம் பார்? இதற்கு நான் என்னடீ செய்வது?" என்று கேட்டாள். தோழி என்ன சொல்லுவாள்? அவளும் மூன்றைப் (நெஞ்சு, நாணம், நலன்)பறிகொடுத்துவிட்டு, ஏங்கிக்கொண்டிருந்தாள். அவளால் என்ன சொல்லமுடியும்? விழித்தாள் என்று நாமாக முடிவு கட்டிக்கொள்வோம். இந்தக் கருத்தமைந்த பாடல் முத்தொள்ளாயிரத்தில் காணக்கிடக்கிறது. அதுஇது:

என்னெஞ்சு நாணு
நல்னு மிவையெல்லாம்
மன்னன் புனனுடன்
வெளவினன்-என்னே
அரவக லல்குலாய்
ஆறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்

முத் : 89.

அதே சோழநாட்டுத் தோகையாள். படுக்கையிலே தன்னந்தனியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். பருவகாலம் - தனிமை! போதாதா ஒரு இளம்பெண்ணைக் கொல்லப் படைகள்? அவள் ஒரே நினைப்பில் சோழனையே நினைத்துக் கொண்டிருக்கிறாள். திடீரென்று கதவு அடிபடுகிறது; திறந்துகொள்கிறது. அந்தச் செந்தாமரை முகத்தாள் திடுக்கிடுகிறாள். "வந்தார் யாரோ" என மயங்குகிறாள். அந்தக் கொத்தலர் பூங்குழலாளின் உள்ளம், வந்த சத்தத்தால் தடுமாறுகிறது. காதளவோடிய தன் கண்களை அந்தக் கதவளவிலேயே நிறுத்துகிறாள். மாதின் மனஅளவு பார்த்த அந்தக் கதவு "வந்தது ஆளல்ல, வாடை" என்று சொல்லாமற் சொல்லுகிறது. சொல்லியும் நம்பவில்லை அந்தச் சுந்தரி. "வடக்கிலிருந்து வரும் அந்த வாடைக்கு அவ்வளவு வலிமை ஏது!" என்று எண்ணமிடுகிறாள். "கிடக்கிறது" என்று திரும்பினாளா? இல்லை! "அரசரின் ஆணைப்படி வரி வாங்க வந்தவனைப்போல் ஆர்ப்பாட்டம் செய்கிறதே இந்த வாடை" என்று உவமை நயத்தோடு சிந்திக்கிறாள். உடனே அவள் உள்ளம் கணக்கைக் கூட்டிக் கழித்து விடை கண்டுபிடிக்கிறது. "புரிகிறது சேதி! இந்த வாடை நம்மிடம் 'பார்வை வரி' வாங்க வந்திருக்கிறது. கிள்ளிவளவனை நாம் பார்த்தோமல்லவா? அதற்கு வரியாக நம் உயிரையே கிள்ளி எடுத்துப்போக வருகிறது. ஆமாம்! வளவனே இந்த வாடையை அனுப்பியிருக்கிறான்!" என நினைக்கிறாள்.

உடனே வாடையிடம் சமரசத்திற்குப் போகிறாள். "பனிதாங்கிய வாடைக் காற்றே, கன்னியர்தானா உனக்கு வரிகொடுக்க வேண்டிய குடிகள்! வேறு யாருமில்லையா? சரி! நானேதான் கொடுத்தாக வேண்டுமென்றால் ஒன்று சொல்கிறேன், கேள்! நீ போய், உன்னை அனுப்பிய மன்னனை இங்கே வரச்சொல்! அவனிடம் பேசிக்கொள்கிறேன். 'வரி வஜா'செய்து தரும்படி கேட்கிறேன்! நீ என்னை வாட்டாமல் போய்விடு. அவன் எனக்கு அருள் புரிவான்!" என்று சாடைமாடையாகக் கூறுகிறாள். வாடைக்காற்று விட்டதா? மேலும் மோதி மோதி அவளது மெல்லிய மேனியையும் பதம் பார்க்கிறது.

"என்ன இது வம்பு? கரிப்படையும் பரிப்படையும் தேர்ப்படையும் கொண்ட சோழன் வந்து என்னை வாழ்விப்பதற்கு முன்னால், நீயே என்னைக் கொன்றுவிடக் கருதுகிறாயா? இது தகாது! போய்விடு" என்கிறாள். இப்படி வாடைக் காற்றோடு பேசிய அந்த வண்ண மயிலாள் நம் அண்ணன்மார் தந்த முத்தொள்ளாயிரத்திற் காணப்படுகிறாள். அதைக் கூறும் பாடல் இது:

பேயோ பெருந்தண்
பனிவாடாய்! பெண்பிறந்தா
ரேயோ உனக்கிங்
கிறைக்குடிகள்-நீயோ
களிபடுமால் யானைக்
கடுமான்றேர்க் கிள்ளி
அளியிடை அற்றம்பார்ப் பாய்

முத் : 102

சென்னை
இயலிசை நாடகக் கழகம்
அளிக்கும்
"தேவாலயம்"
சென்னை,
செயின்ட் மேரீஸ்
மண்டபத்தில்
11-2-56 சனி மாலை 6 மணிக்கு
நடைபெறும்
கதை வசனம்:
எஸ். எஸ். தென்னரசு
பாடல்கள்:
சுப்பு ஆறுமுகம்,
தமிழ்ப்பித்தன்
இசையமைப்பு:
A. L. நரசு, B. A.
கலையமைப்பு:
A. C. சேகர், A. B. பாபு
டைரக்ஷன்: கணேசன்
டிக்கட் விவரம்: ரூ. 3, 2, 1

பிப்ரவரி 20
பொது வேலை நிறுத்தம்

நடிப்பு இசைப் புலவரின் வேண்டுகோள்!

திருவாங்கூர்-கொச்சி, ஆந்திர மாநிலங்களில் பிணைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்றும், தட்சிணப்பிரதேச அமைப்பு என்ற பேரால், தென்னாட்டு மக்களின் உரிமையைப் பறிக்கத் திட்டமிடும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியினையும் எதிர்த்துத் தமிழகத்தின் செல்வாக்குப் பெற்றுள்ள கட்சிகளும், அக்கட்சிகளின் தலைவர்களும் வெளியிட்டுள்ள வேண்டுகோளுக்கு இணங்க 20-2-56 அன்று தமிழகமெங்கும் நடைபெறவிருக்கும் பொது வேலைநிறுத்தத்தில், சினிமா-நாடகத்துறையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நடிகர், நடிகைகளும், ஸ்டுடியோ உரிமையாளர்களும், தொழிலாளர்களும் பெரும் பங்கு கொண்டு கடமையாற்றுமாறு ஆவன செய்ய நடிகர் சங்கம் முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழர்-ஆந்திரர்-கன்னடியர், கேரளத்தவர் ஆகிய நான்கு பகுதி மக்களும் மொழிவழி அடிப்படையில் தனித்தனி ஆட்சி புரிந்தும் இனவழி அடிப்படையில் ஒன்றுபட்டும் இயங்கும் உயர் கொள்கையை உருவாக்கும் வகையில்—தோழமை உள்ளத்துடன், ஆந்திர-கன்னட-மலையாள நடிகர்களும், 20-2-56 அன்று பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டு நடிகர் சங்கத்தின் கடமை உணர்ச்சியை நிலைநாட்ட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

அன்பன்,
கே. ஆர். ராமசாமி

முகப்புச் சித்திரம்

1. இசைப் பெரும் புலவர் திருவாடுதுறை ராஜரத்தினம் அவர்கள் இசை விருந்தை யளிப்பதற்கு முன் அனைவருக்கும் வணக்கம் செலுத்துகிறார்.
2. ஜுபிடர் பிக்சர்ஸ் உரிமையாளர் சோமு அவர்கள், இசை விருந்து பருக வருகிறார்.
3. தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ, அவர்கள் கையில் பையேந்தி உள்ளே நுழைகிறார்!
4. மணிமேகலை—அழகுராணி ஆகியோரின் தந்தையாரான தோழர் வேதாச்சலம் (எஸ். எஸ் பி. லிங்கம்) நாடகப் பேராசிரியர் பொன்னுச்சாமிப் பிள்ளை அவர்களைப் புன்முறுவலுடன் வரவேற்கிறார்.
5. அறிஞர் அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கல்வித் துறைப் பெரியார் வாலாஜாபாத் மாசிலாமணியார் அவர்கள் மணிமேகலை, அழகுராணி ஆகியோருக்கு எழுத்தறிவைத் துவக்கி வைக்கிறார்.
6. அறிஞர் அண்ணா அவர்களின் படம் குழந்தைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்படுகிறது.
7. மணிமேகலை—அழகுராணி ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ள காட்சி.
8. மணிமேகலை—அழகுராணி.
9. நமது இசைப் பெரும் புலவர் இசை விருந்தளிக்கிறார்.
10. அறிஞர் அண்ணா அவர்கள், குழந்தைகள் மணிமேகலை—அழகுராணி ஆகியோரை வாழ்த்துகிறார்.
11. எழுத்தறிவித்தல் நிகழ்ச்சி இனிது நடைபெறுகிறது.
12. நாவலர் நெடுஞ்செழியன் வாழ்த்துக் கூறுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்
17, 18, 19, 20
வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
நாட்களில் நடைபெறும்

— தி. மு. கழகத் தலைமை நிலையம்.

வேலங்குடித் திருவிழா

15

புதிய வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'வேலங்குடித் திருவிழா' தொடர் கதையின் முன்கதை இங்கே சுருக்கி வடித்துத் தரப்பட்டிருக்கிறது.

முன்கதைச் சுருக்கம் :—

[சின்னப்ப பிள்ளை மகள் இந்திராவுக்கும் எழுத்தாளன் பாலனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்திரா, கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பாலனின் தந்தை சொக்கப்ப பிள்ளையின் விருப்பப்படி எல்லோரும் மாப்பிள்ளை வீட்டிற்குப் புறப்பட்டனர். மணமக்கள் சொக்கப்பரின் காரில் வந்துகொண்டிருந்தார்கள். இந்திராவின் அண்ணன் சுந்தரமும் நண்பர்களும் முன்காரில் சென்று கொண்டிருந்தனர். அந்தக் காருக்கு முன்னால் ஒரு அழகு மங்கை விழுந்துகிடந்தாள். அப்பெண்ணை சொக்கப்பரின் வீட்டிற்குக் கொண்டு சென்றனர்.

பாலன், அம்பிகா எனும் அந்தப் பெண்ணை இரவு சந்தித்தான். அவளை வீட்டைவிட்டுப் போய்விடும்படி வேண்டினான். அவள் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்றாள். இதை இந்திராவின் தங்கை கமலம் வெளியிலிருந்து கவனித்தாள். பாலன் வெளிச் சென்றபின் கடிதத்தை எடுத்துப் படித்தாள். அதற்குள் திரும்பிவந்த பாலன், அவளிடமிருந்து கடிதத்தைப் பறித்தான். அங்கிருந்து சென்ற அம்பிகா புதுக்கோட்டை சென்றாள். அதற்குள் கமலம் முதலியோர் புதுக்கோட்டைக்கு வந்துவிட்டனர். அம்பிகா கமலத்தின் வீடுசென்று எல்லோரையும் சந்தித்தாள். கமலத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். சுந்தரத்திடமும் பேசினாள். அதற்குள் மங்கையர்க்கரசி அம்பிகாவை 'வெளியே போ' என்று சொல்லி அனுப்பினாள் சுந்தரமும் அவளைத் தேடி வெளியே சுற்றினான். இருவரும் சந்தித்தபோது போலீஸ் லாரி ஒன்று வந்தது. போலீஸ் அதிகாரி அவர்கள் இருவரையும் போலீஸ் லாரியில் ஏற்றி வந்தார். ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர், அவர்களை விசாரித்து, அன்று இரவே அவர்களை இரண்டு போலீசாருடன் சென்னைக்கு அனுப்பினார். ரயிலில் சென்று கொண்டிருந்தபோது, சுந்தரம் அம்பிகாவிடம் அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்டான். அவள் தன் தாயாரைப் பற்றியும், தாயார் அவளைப் படமுதலாளிக்குப் பலியிட முற்பட்டதையும், அவரிடமிருந்து தான் தப்பி வந்துவிட்டதையும், வீட்டிற்குப் போகாமல் கால்போன விதமெல்லாம் நடந்து சென்றதையும், ராணி மேரி கல்லூரி விடுதியிலுள்ள பெண் ஒருத்தி தன்னைப் பார்த்து உபசரித்ததையும், அந்தக் கல்லூரி மாணவி அவளுக்குத் தெரிந்த சிநேகிதி ஒருத்தி வீட்டில் தன்னை வைத்ததையும், தெருவில் போய்க்கொண்டிருந்த பாலனை அந்த வீட்டிலிருந்து கூப்பிட்டதையும், பாலன் வந்த நேரத்தில் முதலாளிவந்ததையும்-அவர்களுக்குள் நடைபெற்ற சண்டையையும் விபரமாகச் சொன்னாள். பாலன் தன்னை மணந்து கொள்வதாகச் சொல்லிவிட்டு, பின்னர் வராமல் இருந்ததனால் தாய் தன்னைத் தீய வழியில் போகச் சொன்னதையும், தான் மறுத்துவிட்டு மேலைச்சிவபுரி வந்ததையும், பாலனின் திருமணச் செய்தி அறிந்து காரில் விழப்போனதையும் விபரமாகச் சொன்னாள்.

போலீசார் பாதுகாப்புடன் எழும்பூர் வந்திறங்கிய அம்பிகாவும் சுந்தரமும் பாலன் கைது செய்யப்படுவதைக் கண்டு திகைத்தனர். எதுவும் பேசவிடவில்லை! அம்பிகாவும் பாலனும் ஒரு வழியாகவும், பாலன் மட்டிலும் வேறு வழியாகவும், போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

போலீஸ் ஸ்டேஷனில் சுந்தரம் பாலன் என்று தவறாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டதால் சுந்தரம் விடுதலை செய்யப்பட்டான். பாலனைச் சிறையில் தள்ளினார்கள். அம்பிகா அவளது தாயாரோடு கட்டாயப்படுத்தி அனுப்பிவைக்கப்பட்டாள்.

சுந்தரம், இந்திராவின் உடல் நிலை மோசமானது தெரிந்து அவளைப் பார்க்க ஊருக்குச் சென்றான். அவனைவிட்டுப் பிரிக்கப்பட்ட அம்பிகா சுந்தரத்தைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். வெளியே புறப்பட்டாள். தாய் தடை செய்தாள். மீறிச் சென்றுவிட்டாள் அம்பிகா.

போலீஸ் ஸ்டேஷன் சென்றாள். பாலன் கைதுசெய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டதையும் அறிந்து கொண்டாள். சிறைச்சாலையை நோக்கி நடந்தாள். சிறையில் நடைபெற்ற பற்பல நிகழ்ச்சிகளையும் கண்டாள். மனம் நொந்துகொண்டாள். பாலனைப் பார்த்தாள். பாலனைத் தான் எப்படியும் காப்பாற்றுவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பினாள். வீட்டிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு வக்கீலைப் பார்க்கப் புறப்பட்டாள். அப்போது 'இந்திரா பிழைப்பது அரிது' என்ற தந்தி சுந்தரத்திடமிருந்து வந்தது. காரில் இருந்துகொண்டே அழுதாள். பின்னர், வக்கீலைப் பார்த்துப் பாலனின் விடுதலைக்கு ஏற்பாடு செய்தாள்.

மறுநாள். மேலைச்சிவபுரி சென்றாள். ஊருக்குள் நுழையும்போது எதிரே ஒரு பிண ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. அதில் சொக்கப்பர், சின்னப்பர் எல்லோரும் வந்துகொண்டிருந்தனர். அதைக் கண்ட அம்பிகா 'இந்திரா இறந்துவிட்டாள்' என்று நினைத்துக்கொண்டு திரும்பினாள். சென்னையைச் சேர்ந்த கிரிஜா, வனஜா என்ற நாட்டியக்காரிகளுடன் அவர்கள் காரிலேயே சென்னை திரும்பினாள் அம்பிகா. அவர்கள் வீட்டிலேயே அம்பிகா தங்கினாள். மறுபடி வக்கீலைப் போய்ப் பார்த்தாள்.

சிறையிலே சங்கரன் என்ற ஒரு கைதி இருந்தான். அவன் பாலனிடம் தனது வரலாற்றைச் சொல்வான். அவனது மனைவிதான் வனஜா. வனஜாவின் தங்கைதான் கிரிஜா. அம்பிகாவின் ஏற்பாட்டால் பாலன் ஜாமீனில் விடுதலையானான். பாலனுக்கு இந்திராவின் மரணச் செய்தியைத் தெரிவித்தாள். அன்று இரவே பாலன் தன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். ஊர் வந்த பாலனுக்குத் தெரிந்துவிட்டது இந்திரா இறக்கவில்லை என்று. தன் தாய் இறந்த செய்தி கேட்டு அவன் மனம் வருந்தினான். அம்பிகா தன்னிடம் பொய்சொல்லிவிட்டாள் என்று எண்ணிக்கொண்டான். அன்று இரவு பாலன், இந்திரா, கமலம் மூவரும் திரைப்படம் பார்த்தனர்.

தூங்கிக்கொண்டிருந்த அம்பிகாவின் அறையில் ஒரு முரடன் நுழைந்தான். வனஜா என்று அம்பிகாவை எண்ணிக்கொண்டான் அவன். பின்னர் வனஜா இல்லை எனத் தெரிந்துகொண்டான். அம்பிகா "திருடன், திருடன்" என்று குரல் கொடுத்ததும் ஓடிவிட்டான்.

இரண்டு நாட்கள் கழித்து வனஜாவின் வீட்டிற்குப் படமுதலாளி ஒருவர் வந்தார். வனஜாவைத் தனது படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டார். அம்பிகாவுக்கும் 'நடிக்கலாம்' என்ற எண்ணம் தோன்றியது. அன்று மாலைத் தபாலில் பாலனின் கடிதம் வந்தது. அதைப் படித்த அம்பிகா வருந்தினாள். பாலன் கோபமாகத் தான் எழுதியிருந்தான்.

படமுதலாளியுடன் வனஜா அன்றுஇரவு பேசிக்கொண்டிருந்தாள். மறுநாள் அம்பிகாவை அறிமுகம் செய்துவைத்தாள் வனஜா.

"பாலனைக் காப்பாற்றுவோமா வேண்டாமா" என்ற பிரச்சனைக்கு வந்துவிட்டாள் அம்பிகா. ஊரில் இருந்த பாலனுக்கு உடன் வரும்படி கோர்ட் உத்தரவு வந்தது. அதன்படி வந்துவிட்டான். வந்து அம்பிகாவைப் பார்த்தான். இந்திரா பற்றிய செய்தியை அப்போதுதான் அம்பிகா தெரிந்துகொண்டாள். பின்னர் பாலனும் சுந்தரமும் போய்விட்டனர்.

படமுதலாளி அதன் பின்னர் வந்தார். அவர் அம்பிகாவுடன் அளவளாவினார். தனக்கு அம்பிகாவின் மீதுள்ள அன்பையும் எடுத்துச் சொன்னார். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் சொன்னார். அவளும் ஒப்புக்கொண்டாள். உடனே ரிஜிஸ்தர் ஆபீஸ் சென்று திருமணம் செய்துகொண்டனர். படமுதலாளி 'சங்கரன்' என்று ரிஜிஸ்தர் ஆபீசில் கையெழுத்துப் போட்டவுடன் அம்பிகாவின் உயிர் நின்றுவிடும்போலிருந்தது]

இந்த இதழ்த் தொடர்ச்சி :

அவரை மீண்டும் நன்றாகக் கவனித்தாள், அம்பிகா. ஆம்; சந்தேகமில்லை! அதே சங்கரன்! சிறைச்சாலையில் சந்தித்த உருவம்; சிங்காரித்துக்கொண்டு வந்துள்ளது!—அவள் மேனி ஒரு முறை ஆடி அடங்கிற்று!

"சரி. போகலாம்" என்றார், முதலாளி—அதாவது சங்கரன்! அம்பிகா நடைப்பிணமாகச் சென்று, காரில் ஏறினாள். அருகில் நெருங்கியபடி உட்கார்ந்து

கொண்டார், முதலாளி. சார மற்ற—சத்தற்ற வாழ்வு, மணம் முடித்ததுமே தோன்றிவிடும் என்று எண்ணியதில்லை, அந்தப் பரிதாபத்துக்குரியவள். அவளுக்குச் சங்கரனிடம் காதல் இல்லை; காற்றாடிபோல் அலை பாயும் வாழ்விலிருந்து விடுதலையும், நிம்மதியான உலகுக்குப் பாதையும் கிடைக்குமென்று தான் இணங்கினாள். ஆனால், "சங்கரன் தன் கணவன்" என்கிற எண்ணம், இப்போது அவளைப் பயமுறுத்தவே ஆரம்பித்தது. இப்படித்தான் வாழ்க்கை சுழித்துக் கொண்டு ஓடும். அமைதியான ஓட்டம் நிரந்தரமாகக் கிடைக்காது. வரும்; சுழிக்கும்; வருந்த வைக்கும்; துணிவு தரும்; பயம் காட்டும்; கண்ணீரை வரவழைக்கும்; செத்துப் போனால் நிம்மதி என்று எண்ணவைக்கும்; பிறகு ஒரு அசாத்தியத் தைரியம் வரும்--இவ்வளவு வர்ணபேதங்களுக்கும் இடையில்தான், மனிதன் ஆசைகளை வளர்த்துக் கொண்டே போகிறான். அம்பிகா அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால், அந்த நேரத்தில், அவளது சிந்தனை, உலகத்துத் தொல்லைகளெல்லாம் அவளையே வட்டமிடுவதாகக் கூறிற்று! வனஜாவும் இனஜாவும் அதிட்டக்காரிகள் என்பதுபோல் அவள் மனம் எண்ணமிட்டது. அவள் சங்கரனை வெறுக்கத் தலைப்பட்டாள், அப்போதே! அந்த வெறுப்புத் தோன்றிய சமயத்திலேயே, சங்கரன் அவள் தோள்மீது கை போட்டான்! கார் ஓடிக்கொண்டிருந்தது. அம்பிகா, சிறிதும் தயக்கமின்றி, அந்தக் கையை எடுத்து, அவன் உடம்பிலேயே தொங்கவிட்டாள்.

"சரி சரி. காரில் காதல் புரிவது இவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! இயற்கை தானே!" என்று நினைத்தபடி, சிரித்துக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான் சங்கரன். பிறகு ஊடல் புரிபவன் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அம்பிகா, இந்த நாடகத்தில் சிறிதுகூட அக்கறை கொள்ளவில்லை. அவள் ஒரு மாயா உலகில் அலைமோதிக் கொண்டிருந்தாள். "சங்கரன் எப்படி — எப்போது படமுதலாளி ஆனான்?"—இது அவளுக்கு நீங்காத புதிராக இருந்தது. "கொலைகாரனுக்கு என்ன! திருடிக்கூடப் பணம் சேர்த்திருக்கலாம்!" என்று தானாக முடிவு கட்டிக் கொண்டாள். மணம் முடியாமல் இருந்திருந்தால், அவனை அப்பொழுதே போலீஸில் ஒப்படைத்திருப்பாள், அவள். ஆனால், இப்போது சங்கரன், தப்பி வந்த கைதி அல்ல; அவளது கணவன்!--கணவன்! ஆம்; கைது செய்யப்பட்டால், கண்ணீர் விடவேண்டியவள் அவள்!—அம்பிகாவின் தலை சுழன்றது. காரிலிருந்து குதித்து விடவேண்டும் போல் தோன்றிற்று. கதவைத் திறந்தாள். படக்கென்று அவளைப் பிடித்துக் கொண்டான், சங்கரன். அம்பிகா மூர்ச்சையுற்றாள்; சங்கரன் மடிமீது சாய்ந்தாள்.

கார், மைலாப்பூரில் ஒரு வீட்டின் அருகில் வந்து நின்றது. அதுதான், சங்கரன் இல்லம். அங்கிருந்து சில வேலையாட்கள் ஓடி வந்து கதவைத் திறந்தார்கள். அம்பிகாவைக் கைத்தாங்கலாக உள்ளே கொண்டு வந்தான், சங்கரன். படுக்கையில் கிடத்தி, தண்ணீர் தெளித்து, மூர்ச்சை தெளிவித்தான். அம்பிகா கண் திறந்தாள்.

"இது என்ன புதிய உலகம்! நான் யார்? எப்போது இங்கு வந்தேன்?"--இப்படியாக அந்த மாதிரி சமயத்தில் கேட்கவேண்டிய கேள்விகளை அவள் கேட்கவில்லை. சங்கரன் முகத்தை வெறுப்போடு நோக்கினாள். ஆனால் அந்த வெறுப்பும் வெகு நேரம் நீடிக்கவில்லை. அவன் கண்களில் கண்ணீர் மல்கிக் கிடந்தது. "அம்பிகாவுக்கு உண்மை தெரிந்து விட்டது!" என்பதை அவன் கண்டுபிடித்து விட்டான். தன் வாழ்வுபற்றிய சங்கடங்களும் அவன் மனதை அழுத்தின. தலை மறைவு வாழ்வு—திருடிச் சேர்த்த பணம்—அதை ஆள, ஏமாற்றி ஒருத்தியை மணந்து—இதெல்லாம் அவன் விரும்பிச் செய்தவை அல்ல. சந்தர்ப்பம் அவனை அந்த அளவில் கொண்டு நிறுத்தியது. அதைத் தாண்டிச் செல்ல ஓர் நியாயமான—கண்ணியமான வழி துப்புரவாக இல்லை. சொன்னால், இதை யார் நம்புவார்கள்? அதிலும் அம்பிகா எப்படி நம்புவாள்!—அவன் அழுதான். மனதிலிருக்கும் பாரம் தண்ணீர் வடிவில் தான் இருக்கிறது. அதுதான் கண்ணீராக வெளியேறுகிறது! —அம்பிகாவின் இதயம் சுலபத்தில் இளகிக்கொடுக்கவில்லை. ஆனாலும், எவ்வளவு நேரம் பெண்கள் அந்தக் கல்நெஞ்சத்தைக் கட்டிக் காக்க முடியும்!

அவள் மெதுவாக எழுந்தாள். அவன் கண்களைத் துடைத்தாள். "அம்பிகா ... அம்பிகா ..." என்று குமறினான் அவன். 'குபுக்'கென்று அவன் மார்பில் சாய்ந்து விம்மி விம்மி அழுதாள், அவள். அழுகை — அதுதான் தைரியத்தின் தந்தை. நிச்சயமாக, அழுவது கோழைத்தனமல்ல! பின்னால் வரப்போகும் விரக்தி கலந்த வீரத்துக்கு அது தான் முன்னுரை. இருவரும் அழுது ஓய்ந்தனர். ஒருவர் கண்ணீரை ஒருவர் துடைத்து உள்ளத்தை வெளிப்படுத்திக் கொண்டனர். கணவனும் மனைவியும் எப்போதும் இன்பத்தில் நீந்துவதைவிட பாதிநேரம் இருவரும் சேர்ந்தாற்போல்அழுவது, மகிழ்ச்சியை ஒரே அளவில் நீட்டிக்க வழி கோலும். ஆம். கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தபோது, அம்பிகாவுக்கு சங்கரன், புதிய மனிதனாகத் தோன்றினான்; சங்கரனுக்கு அம்பிகா உயிராகக் காட்சியளித்தாள். தலை கோதி, முகம் கோதி, கன்னத்தை வருடி, பார்த்த விழி பார்த்தபடி சிலையாக நின்று, பிறகு அவசர அவசரமாக அவள் முகத்தை மார்பில் சேர்த்துக் கொண்டான். இதெல்லாம், பக்கங்கள் விடுபடாத புத்தகத்தைப் படிப்பது போல! கொஞ்சம் கொஞ்சமாக உணர்ச்சி வெறியேறும்! பிறகு கதவைத் தாளிட்டான். கட்டிலில் அமர்ந்தபடி, அவள் தலையைத் தன் மடிமீது சாய்த்துக் கொண்டான். அம்பிகா, கதாநாயகி ஆகத் தயாரானாள்.

"அம்பிகா! உனக்கு உண்மை தெரிந்து விட்டது என்பதை உணருகிறேன் நான். கொலை புரிந்து, சிறை சென்றவனாயிற்றே, இவனா நம் கணவன் என்று அவலமுறுகிறாய் நீ! அதிலும் விடுதலை பெற்றவன்கூட அல்ல; தப்பித்து வந்தவன். உன் மனம் படும் பாடு எனக்குத் தெரியும். ஏன்; சுவரேறிக் குதித்து அன்று தொல்லை கொடுத்தவனும் நான் தான்!—ஆகவே எந்த வகையிலும் என் மீது உனக்குப் பாசம் ஏற்பட நியாயம் இல்லை. ஆனாலும் நீ அறிந்தோ அறியாமலோ, இருக்கக்கூடியவனைத்தையும் உன்னிடம்சொல்லிவிட நான் விரும்புகிறேன். துன்பங்களைப் பிறரிடம் சொல்வதாலே ஆறுதல் ஏற்படுகிறது. அதிலும் அந்தப் பிறர் நமக்கு நெருங்கியவர்களாக இருந்தால் மகிழ்வே முகிழ்க்கிறது! உன்னிடம் சொல்வதிலே எனக்குப் பெருத்த நிம்மதி கிடைக்கும். சொல்கிறேன் கேள். நான் அதிகம் படித்தவனல்ல. ஆனாலும், படித்தவர்களைக் காட்டிலும் அனுபவம் பெற்றவன். உலகத்தை நன்றாக உணர்ந்தவன். ஒரு உண்மையை நீ அறியமாட்டாய். அன்றைக்கு, உன்னைக் கைப்பிடித்தபோது கூட நான் அதை வெளியிடவில்லை. இன்று சொல்கிறேன். வனஜா, எனது மனைவி! நீ திகைத்துத் திணறுகிறாய். கதையா, கற்பனையா என்றெல்லாம் சந்தேகப்படுகிறாய். இல்லை. உண்மை. என் அத்தை மகள் தான் வனஜா. அத்தையைத் தான் நான் கொலை செய்தேன். ஏன்? இன்றைக்கு வனஜா எப்படி நடந்துகொள்கிறாளோ அப்படியே என் கண்முன்னால் அப்பொழுது நடக்க ஆரம்பித்தாள். வெடகத்தை விட்டுச் சொல்கிறேன். கலைவெறியால் என் உள்ளத்தை உடைத்தாள். மானம் மரியாதையையே சோதித்தாள். கேவலமான மனிதன்கூட, தன் மனைவி பிறருடன் உறவுகொள்வதைக் கண்ணால் காணச் சகிக்கமாட்டான். நான் சராசரி மனிதன். சராசரி மனிதர்கள் கடைப்பிடிக்கும் இயற்கை நியதிகளை நானும் கடைப்பிடித்தவன். என்னால் பொறுக்க முடியவில்லை. அவ்வளவுக்கும் காரணமான அவள் தாயை—என் அத்தையைக் குத்திக் கொன்றேன். அதனாலே என் மானம் காப்பாற்றப் பட்டதா? இல்லை! மனைவி தப்பி வாழ்ந்தாள்—வாழ்கிறாள். அவளையும் கொன்றுவிடவே சிறையிலிருந்து தப்பினேன். ஒரேயடியாக அன்று கொன்று தீர்த்திருப்பேன். ஆனால், இரண்டுவகைக் குற்றங்களுக்காக நான் போலீஸாரால் தீவிரமாகத் தேடப்படும் நிலைமை ஏற்படும்! ஆகவே, பொறுத்து, நேரம் பார்த்து அவளைக் கொன்று சடலத்தையே மறைத்துவிடத் திட்டமிட்டேன். அதற்கு முன்னாகத் திருடிப் பணம் சேர்த்தேன். படமுதலாளி என்று பட்டம் சூட்டிக்கொண்டேன். அவளோடு கொஞ்சினேன்; குலவினேன் — அறிவாய் நீ! அதற்குள் உன் நல்ல குணம் என்னைக் கவர்ந்தது; வாழ்விலே எனக்கு ஆசை பிறந்தது. "சண்டாளி எப்படியோ தொலையட்டும்; இந்த உத்தமியை மணந்து வாழ்வோம்" என்று முடிவு கொண்டேன்...பிறகு நடந்தது உனக்குத் தெரியும். அம்பிகா! என்னை நீ நம்பலாம். இதுதான் நான் வாழ்ந்த கதையும்; வாடிய கதையும். நீ எனக்குக் கிடைத்தது பெருந்தனம் கிடைத்தது போல! என்னை வெறுக்கிறாயா? என் கதை உனக்குப் பிடிக்கவில்லையா? ஏன் அப்படியே அசையாமல் இருக்கிறாய்? சொல், அம்பிகா! அன்பு நிறைந்த உன் இதயம் என்னை அணைத்துக்கொள்ள இடம் கொடுக்கவில்லையா?"-சங்கரன் என்னென்னவோ பேசிக் கொண்டு போனான். அம்பிகா தலைதூக்கி, "அப்படியெல்லாம் பேசாதீர்கள்!" என்று கூறி, அவன் எதிர்பாராதவிதமாக ஒரு மெதுவான முத்தம் பதித்தாள். சங்கரன் மேனி சிலிர்த்தது.

"என்ன ஆனாலும் நீங்கள் என் கணவர். உங்களைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பதே இனி என் கடமை. நாம் இனி இங்கு இருக்கக் கூடாது. எங்காவது கல்கத்தாப் பக்கம் போய்விடுவோம்!"—என்றாள், அவள்.

"மறுப்பேனா? பாங்கில் ராமநாதன் என்ற பெயரில் நாற்பதாயிரம் ரூபாய்கள் போட்டிருக்கிறேன்! அதை நாளையே 'வெட்டி' எடுத்துக்கொண்டு புறப்படுவோம்!" என்றான் சங்கரன். பாலன் வழக்கில் தான் சாட்சியம் சொல்லவேண்டுமே என்கிற எண்ணமே அம்பிகாவுக்கு இல்லை.

பிறகு சங்கரன், காதல் உலகில் தான் கற்றவற்றை அம்பிகாவிடம் செயல் வழியில் விமர்சித்தான். அம்பிகா அதை ஆவலோடு வரவேற்றாள். சிந்தனையிலேயே கிடந்து வாட்டி எடுத்த இன்ப நினைவுகள், அவளை இப்போது "என்னடியம்மா! எப்படி?" என்று கேட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் அப்படியே ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோற்றமின்றி மகிழ்ந்தார்கள். பொழுது சென்றது.

அவர்கள் தூங்கவில்லை.

தொடரும்

மதுகை மாந்தரும் மதுரை மாதரும்!

மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கம்பீரமாகக் காட்சி யளிக்கும் கூடல்மாநகரின் நீண்ட தெருக்கள் சந்தனக் குழம்பால் சகதியாயிருந்தன. புலவர் ஒருவர் பாதைவழியே நடந்து வருகிறார். அவர் பாதங்களில் சந்தனச்சேறு தோய்ந்தது. குங்குமம் கலந்த சந்தனக் குழம்பு அவர் நாசியில் மணம் பரப்பியது. பன்னீரும் குங்குமமும் கலந்த சந்தனக் கலவை வீதியெல்லாம் எங்ஙனம் குழைகிறது? சிந்தனை அவரின் சிந்தையில் கேள்விக்குறியைப் போட்டது! அவரின் கண்கள் கோபுரங்களின் சாளரங்களை ஊடுருவின! மாளிகையின் சன்னல்களைக் கவனித்தார். அவர் வினவுக்கு விடை அங்கே காத்துக்கிடந்தது.

சந்திரனை மயங்கச் செய்யும் மதிவதனங்கள் சாளரங்களில் சிரித்தன. கயலோடும் விழிகள் ஊடலால் துடித்தன. கதுப்பு நிறைந்த கன்னங்கள் சிவந்திருந் தன. புலவரின் புருவங்கள் நெறிந்தன. அவர் விழிகள் அந்த அழகிகளை விழுங்கின. மன்ம தனைத் தோற்கடித்த மாறர்கள் தங்கள் காதலிகளின் ஊடலைத் தீர்க்க—பன்னீர் கலந்த சந்தனக் கிண்ணங்களோடு அவர்களை அருகுகின்றனர்! ஆசையும் ஆர்வமும் பின்னித் துடிக்க ஆசை நாயகிகளை நெருங்குகின் றனர்! ஊடல் மிகுந்துள்ள அந்த அழகு சுந்தரிகள்-ஆடவர்களின் கைகளிலிருக்கும் கிண்ணங்களை 'வெடுக்' கென்று பிடுங்கி வீதி களில் ஊற்றுகின்றனர்! எல்லாம் சில விநாடிகளில் நடைபெற்று விடுகிறது. சந்தனக் கலவையின் சில துளிகள் புலவரின் ஆடை யை நனைத்து அங்கத்தைத் தொடுகின்றன. அவரின் பாதங்கள் சந் தனச் சேற்றில் 'பாவி' மெழுகிறது நறுமணம் எங்கும் பரவுகிறது. புலவருக்கு விஷயம் புரிந்து விட்டது. சிரித்த இதயத்தோடு நடையைக்கட்டினர்.

நண்பர் வேலே எஸ். எழில் பாண்டிய நாட்டுப் பைங்கிளிகள் தரும் காட்சியையும், அயோத்தி-மிதிலை ஆரணங்குகளின் உராய் வுக் காட்சியையும் இலக்கியக் கண்கொண்டு ஒப்பிட்டு நோக்கி யுள்ளார்; இது கம்பராமாயணத் தையும் முத்தொள்ளாயிரத்தை யும் வைத்து ஒப்பு நோக்கிய திறனாய்வு. ஒரே காட்சி - இடம் இரண்டு-அதனுல் பண்பாடு மாறு கிறது என்பது நண்பர் கருத்து. என்ன உங்கள் கருத்து? படித் துச் சொல்லுங்கள்.

கவிஞரின் கனிந்த நெஞ்சம் கூடல்மாநகரின் தெருக்களில் நடக்கும் காட்சிகளை உருவகப் படுத்தியது. தென்னன் நெடு மாடக் கூடல்மாநகர் எத்தகைய பண்பாட்டுச் சிறப்பைப் பெற் றிருந்தது என்பதைத் தம் பாடலால் தெளிவாக்கினர். பெயர் தெரியாத புலவரின் பண்புமிக்க பாடல் இதோ—படியுங்கள்...!

"மைந்தரோ(டு) ஊடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி எங்கும்
தடுமாறல் ஆகிய தன்மைத்தே — தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்!"

தென்னன் நெடுமாடக் கூடல்நகர்பற்றிப் பாடல் செய்த பாவல னின் பண்புதான் என்னே! பெயர் தெரியாப் புலவர் தமிழகத்தின் தனிப் பெரும் பண்பை — வெகு லாவகமாகப் பாடலில் தீட்டி யுள்ளார்!

புகழ் பெற்ற கவிஞன் — புலவர்களும், புராணிகர்களும் போற்றும் புலவன்—ஆரியம் ஏத்திப் போற்றும் கம்பன் செய்துள்ள பாடல் ஒன்றைக் கவனிப்போம்! கம்பனின் பாடல்கள் காமச்சுவை நிரம்பியவைகள் என்பது சொல்லித் தெரிய வேண்டுவதில்லை

மிதிலைநகர வீதியில் சந்தனச் சேறு குழம்புவதற்குக் காரணம் காட்டுகிருர் — இராம காதை யாத்த புலவர்! மிதிலை நாகரிகத்தை யும், மதுரை நாகரிகத்தையும் இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

சேனை செல்கிறது. ஜனக் கூட்டம் இடித்து நெருக்குகிறது. ஆடவரும் பெண்டிரும் அடையாளம் தெரியமாட்டாமல் இடித்துத் தள்ளிக்கொண்டு போகின்றனராம்! ஜனக் கூட்டத்தின் நெருக் கத்தால் ஆணும், பெண்ணும் அணைத்தபடி செல்கின்றனராம்!

இட நெருக்கடி காரணமாக ஆடவரும் பெண்டிரும் உராசிச் செல்கின்றனர் — உண்மை! அதன் காரணமாகவே எது வேண்டு மானலும் செய்யலாம் என்ற நிலை அநாகரிகமன்ருே? கோதையரின் கூந்தலில் கூத்தாடிய மலர்கள் சரிந்து—ஆடவர்களின் பாதங்களில் மிதிபட்டன என்று பாடியிருக்கலாம்! கம்பரால் — மிதிலைமாபுரி யின் மாட்சிமையைச் சொல்லாமல்விட மனமில்லையே...! உண் மையை ஒளிக்காமல் சொல்லிவிடுகிருர்? சிலர் உண்மையை மறைக்க எண்ணுவர். அவர்கள் மனதில் பொய்மையை உருவகம் செய்து கொண்டிருப்பார்கள். ஆனல் அவர்களையும் மீறி வாயில் உண்மை சில சமயங்களில் வெளிப்பட்டுவிடும்! அப்படித்தான் கம்பர்—வால்மீகி இராமாயணத்தை...தமிழ்ப் பண்பாக்கு முயன்று, சிலபல இடங்களில் உண்மையைக் கக்கி விட்டிருக்கிருர்.

ஆணும் பெண்ணும் மோதிக் கொள்கின்றனராம்! அணங்கு கள் மார்பில் அப்பியிருந்த குங்குமம் குழைந்து — உருகி வழி கிறதாம்! காரணம் — இட நெருக்கடியால் ஏற்பட்ட சூட்டால் அன்று! ஆடவர்கள் தங்கள் பரந்த மார்புகளில் பூசியிருக்கும் சந்தனக் குழம்பு—பெண்டிர் தடவியிருக்கும் குங்குமத்தைக் கரைத்துக் கொண்டு வழிகிறதாம்! ஜனக்கூட்டமான இடமென் ருலும் ஆணும் பெண்ணும் தழுவிக்கொள்ள முடியாது—அது அநாகரிகமென்ற காரணத்தால்! ஆனல், மிதிலைமாநகரில் ஆணும் பெண்ணும் அணைத்துக் கொண்டிருக்கின்றனர்! படை செல்லும் காட்சியைக் காணவந்தவர்கள்—தங்கள் மோகபசியைத் தணித் துக்கொண்டிருக்கிருர்கள்! அவர்கள் அப்படி அணைத்து மகிழ்ந்த தன் காரணமாக—தெருவெல்லாம் சந்தனமும் குங்குமமும் கலந்த சேறு சகதியாகியுள்ளது!

கம்பர் இதோடு விடுவதாக இல்லை! தழுவி மகிழும் காட்சியைக் கண்டதும் 'காமக்குரோதாதிகள்'—அவர்களுக்குப் பலவித நினைவு களை வெறியூட்டி இருக்கலாம் என்ற எண்ணம் புலவருக்குப் படாமலாபோகும்! அங்கேதான் 'ரஜோ குணம்' தலை விரித்தாடு கிறதே! கம்பர் இதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியுமா, என்ன? வீதியில் வழிந்தோடும் சந்தனக் குழம்பை உன்னிப்பாகப் பார்த்தார்! மிக, மிக உயர்ந்த இடத்திலிருந்து — அதாவது ரஜோகுணத்தின் முகட்டில் நின்றுகொண்டு வீதியின் நிலையை உருவகம் செய்துள்ளார்!

அந்த வீதி எங்ஙனம் காட்சி யளிக்கிறது தெரியுமா? தழுவி மகிழ்ந்த ஆடவரும் பெண்டிரும் இடம் பெயர்ந்தனர். காலியான தெருவைக் கவிஞர் கண்டார்—களிகொண்டார்! கவி பாடலானர்! அந்த சேனை சமுத்திரம் சென்ற வீதி — ஆடவரும் பெண்டிரும் கலவி நிகழ்த்திய மெல்லிய பூம் படுக்கையைப் போன்றிருக்கிறதாம்! இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? மிதிலைநகர வீதிகளில் இத்தகு காட்சிகள் சர்வசாதாரணமாக இருக்கும்! ஏனெனில் அதற்கு ஆதாரங்கள் கம்ப ராமாயணம் எங்கும் விரவிக் கிடக்கின் றன! இதோ கம்பரின் அந்தப்பாடல்!

"இணையெடுத் திடையிடை நெருக்க வேழையார்
துணைமுலைக் குங்குமச் சுவடு மாடவர்
மணிவரைப் புயங்களிற் சாந்து மாழ்கிமெல்
லணையெனப் பொலிந்தக் கடல் செலாறரோ!"

இப்பாடலில் உள்ள 'ஆழ்ந்த ஆபாச மொன்றை' மறைக்க முயன்றுள்ளேன். பாடலை ஊன்றிக்கவனிப்போர் அந்த ஆபாச மறைவுக்காக 'தழுவல் நிலையை' உருவாக்கியுள்ளேன். இட நெருக் கடி காரணமாக மிதிலை வீதியில் ஆணும் பெண்ணும் தழுவிக் கொள்கின்றனர்; எனினும் இப்பாடலில் இன்னொரு 'லீலை' புதைந்து கிடக்கிறது — அதை அறிந்து கொள்ளுங்கள் — சிறிது சிந்திப்பதின் மூலம்!

இராம பக்தர்களின் மனதை மகிழ்விக்கும் பொருட்டுக் கம்பர் வர்ணித்த மிதிலாபுரிப் பண்பாட்டினையும், பெயர் தெரியாத முத் தொள்ளாயிரப் படைப்பாசிரியர் மதுரைமாநகரின் மாண்பையும், பண்பையும் வர்ணிக்கும் விதத்தையும் கவனியுங்கள்! திராவிடத் தின் பண்பு தெரியும்!

★ ★ ★

இன்னிசை வள்ளலுக்குத் தென்திசைத் தலைவர் மாலை போடும் காட்சி இது!

ஆசிரியத் தோழருக்கு

—இராசன்—

புயற்பகுதியில் புல்லுருவிகள்

அன்புடையீர்

வணக்கம்.

அணிமையில் வீசிய பெரும் புயலில் பெரிதும் பாதிக்கப்பட்டு சீர்கெட்ட ஊர்களில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த திருக்கோட்டியூரும் ஒன்று. அங்கே வாழ்விழந்த ஏழைப் பெருமக்கள் ஏராளம். செய்தி கேட்டுத் திடுக்கிட்ட காமராஜர் சர்க்கார் உடனடியாகப் பல வகைப்பட்ட ஊர்திகளில் புறப்பட்டு இயன்றதைச் செய்ய முன் வந்தது பாராட்டத்தக்கதுதான். அந்த உதவிகளில் திருக்கோட்டியூரும் கையேந்தி நின்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அழிந்துபட்ட காட்சிகளைப் பார்வையிட வந்த திருப்புத்தூர் தாலூகா தாசில்தார் திரு. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் நேர்மையான வகையில் பணத்தை விநியோகம் செய்து, கண்ணீர் சிந்தினோரின் வாழ்த்தைப் பெற்றுக்கொண்டு போனார். திரு. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனபிறகு, உள்ளூர் கிராம தேவதை கர்ணம் சீனிவாசய்யங்கார், நிவாரணம் பெற்றுக் கொண்ட ஏழைப் பொதுமக்களிடம் சில கையாட்களை (போலிப் பெரிய மனிதர்கள்)க் கொண்டு தாசில்தார் அவர்கள் கொடுத்து விட்டுப் போன தொகையில்—ஒரு வீட்டுக்குக் கிடைத்த தொகையில் பத்து ரூபாய்க்கு ஒரு ரூபாய் வீதம் கட்டாயப்படுத்தி லஞ்சத் தொகையாக வசூலித்துக் கொண்டார்கள். இந்தச் செயல்-கேவலமான காரியம் — அந்த வட்டாரத்துப் பொதுமக்களால் காறி உமிழும் நிலையில் இருந்தாலும் பிள்ளைப்பூச்சிகளாக அடங்கிக் கிடக்கிறார்கள் அவர்கள்.

கர்ணம் சீனிவாசனார் அவர்களின் திருவிளையாடல் அதோடு நின்று விடவில்லை.

புயல் நிவாரணத்திற்கென சர்க்காரால் இனாமாக அளிக்கப்பட்ட உரம், விதை, வகையறுக்களுக்கு சர்டிபிகேட் ஒன்றுக்கு ரூபா ஒன்று வீதம் வாங்கிக் கொண்டும், ஒரு சிலருக்கு அது போலவும் கொடுக்காமல் ஒரு சில கையாட்களைக் கொண்டு பொய்ச் சர்டிபிகேட்டுகளைத் தயாரித்துத் தானியங்களைத் தன் சொந்த உபயோகத்திற்கே வைத்துக் கொண்டார்.

சென்னை சர்க்கார் புயல் நிவாரணத்திற்கு உடனடி நடவடிக்கை எடுத்தும் அந்த நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்தரக் கூடியதாக அமையவில்லை என்பதற்கு எங்கள் திருக்கோட்டியூர்ஒன்றே சான்றாக நிற்கிறது.

இதுபற்றி, சுற்றுப் பயணம் வந்த நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்களிடம் எழுத்து மூலம் தெரி(29-12-55)விக்கப்பட்டது. அவரும் வழக்கம்போல் 'ஆகட்டும் பார்ப்போம்' என்று சொல்லிப் போயிருக்கிறார்.

உதவி பெற்றவர்களில், உண்மையில்,விவசாய அலுவலகத்தில் உள்ள ரிக்கார்டுகளைப் பரிசோதித்தால்,ஷி கர்ணத்திடம் உதவி பெற்றவர்கள் அசல் விவசாயிகளா அல்லது போலிகளா என்பது புலனாகும். இதுபற்றி சர்க்கார் மௌனம் சாதித்தால்,ஏழை உழவர்களின் வாழ்வு அரிக்கப்பட்டு விடும். இந்த நிலையில் சர்க்கார் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்கிறது! எவ்வாறு இயலும்? ஊருக்கொரு சீனிவாசன் இருந்தால் தென்னாட்டின் நிலை சுடுகாடாகப் போய்விட்டாலும் ஆச்சரியமில்லை தான்.

இளைஞர் முன்னணி,
திருக்கோட்டியூர்.

மதுரை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்

மதுரை மாவட்டச் செயற்குழுக் கூட்டம் 12-2-56 காலை 10 மணிக்கு மதுரைநகர் தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : 20-2-56ல் நடக்க இருக்கும் போராட்டம்.

எஸ். முத்து,
மதுரை மாவட்டச் செயலாளர்.

பனிமண்டலப்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

உள்ளம் கொண்டோரும் தங்களது தோழனை இழந்துவிட்டதற்காகக் கதறி அழுதனர். அவனது சாவைப் பற்றி மற்றொரு ரஷ்யக் கவிஞனை லெர்மாண்டோவ் எழுதிய கவிதையை நாடெங்கும் பாடினராம் மக்கள்.

ரஷ்ய இலக்கிய வரலாற்றை அறிந்தோர் தான் புஷ்கின் ஆற்றிய பெருந்தொண்டுகளை உணரமுடியும். அவனுக்கு முன்னே ரஷ்யாவில் இலக்கியம் என்று சொல்லத்தக்க எதுவுமே கிடையாது. வெறும் சரித்திரங்களைக் கூறுகிற ஒன்றிரண்டு நூல்களே அதற்குமுன்னர் ரஷ்ய மொழியில் இருந்தன. மக்களின் நிலைமையும் தேவைகளையும் கூறுகிற, வாழ்வின் மேடு பள்ளங்களை விளக்கிக் காட்டுகிற, கற்பனை வளமும் கவிதைச் சுவையும் மிக்கதான எவையும் ரஷ்ய இலக்கியத்தில் புஷ்கினுக்கு முன்னால் இருந்ததில்லை. அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த ரஷ்யா, ஆதிக்கவாதிகளின் கூடாரமாக ஆகிக்கொண்டிருந்த ரஷ்யா தூக்கத்திலிருந்து விழித்து உலகத்தின் முன்னோடும் பிள்ளையாக ஆனதற்கு அடிப்படைக் காரணமே புஷ்கின்தான். அவனுடைய எழுத்துக்களே பின்னாளில் ரஷ்யப் புரட்சி நடைபெற்று சோவியத் பொதுவுடமைக் குடியரசு ஏற்படுவதற்கான, மக்கள் மனநிலை மாற்றத்திற்குத் தேவையான எண்ண விதைகளைத் தூவின என்றால் தவறல்ல. கண்ணுக்கு எட்டாத எதையும் பற்றி அவன் பாட விரும்பவில்லை. தேவையைப் பாடினான். பழமைக்குப் பக்கவாத்தியம் வாசிக்க அவன் பழகவில்லை.

'அண்ணே! பழைய பஞ்சாங்கத்தைப் பிழிந்தாலும் சொட்டு நீராவது வருமா? ராசிபலனைப் பாடம் பண்ணினால் வயல் விளையுமா?...உலகின் முன்னேற்றம் உழைப்பில் உள்ளது. நன்றாகப் பாடுபடு. வந்ததைப் பகுத்து உண் எல்லோரும் சமமென்று எண்ணு!...' என்றெல்லாம் அவன் பாடினான்.

அவனது ஏடுகளில் எண்ணங்களுக்காகவே சொற்கள் இருக்கின்றன. சொற்களின் லாகவங்களுக்காக எண்ணங்களை அவன் படைப்பதில்லை. 'தேவைக்கு மீறி வளருகின்ற நகத்தை வெட்டுவது போல எனது இலக்கியத்தில் எதையும் வெட்டிவிட முடியாது. நான் ஏற்படுத்தும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவசியத்துக்காக, வளரும் பல்லைப் போன்றது...' என்று அவனே கூறுகிறான். 'ஏ அனாதை ரஷ்யாவே...!' என்று எல்லா இலக்கிய கர்த்தாக்களாலும் பரிதாபமாக அழைக்கப்பட்ட ரஷ்ய இலக்கியம் அவனாலேயே புதிய பாதையை வகுத்துக்கொண்டது. மொழி வளமை மிக்கதாக உருமாறியது. இதையே ரஷ்யாவின் மாபெரும் எழுத்தாளர் கார்க்கி 'ரஷ்ய மொழியின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்பொழுது எதிர்காலத்து இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இந்த மொழி புஷ்கின், துர்கனீவ், செகாவ் ஆகியவர்களால் உருவாக்கப்பட்டது என்று சொல்வார்கள்...' எனத் தெளிவாகக் குறிப்பிட்டார். தான் மட்டுமல்லாமல் பிறரும் சிறந்த இலக்கியங்களை ரஷ்யமொழியில் படைப்பதற்குப் பேருதவிகள் புரிந்தவன் புஷ்கின். அத்தகையவற்றுள் கொகெல் எழுதிய 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' என்ற நாடகமும் ஒன்று. அதன் மூலம் கொகொலை வசன இலக்கிய கர்த்தாவாக புஷ்கினே உயர்த்தினான் என்று பலரும் கூறுவர்.

'நான் இன்று நமது புதிய வாழ்வைக் காட்டும் பாட்டாளிப் பொது மக்களின் கவியாக மாத்திரமே இருக்கமுடியும்....வாழ்நாள் முழுவதும் நான் பாடுபட்டது அழகிய பாடல்களை ஆக்கி, கேட்பவர்களின் காதுகளில் செஞ்சொற்றேனைச் சொரிந்து நெஞ்சை அள்ளுவதற்காக அல்ல. சிலரை, சில முறைகளைத் தலைகுப்புறக் கவிழ்ப்பதே எனது போராட்டம்...எனது இருபது வருட இலக்கியப் பணியில் உண்மையாக நான் இலக்கியத்துக்குச் சண்டையே நடத்தி வந்திருக்கிறேன்...' என்று பாடுகிற மாயக்காவஸ்கி போன்ற பாட்டாளிவர்க்கப் பெருங்கவிஞர்கள், அவன் வகுத்த பாதையிலே தான் நடந்தனர். அவன் கட்டிய இலக்கியக் கோட்டையிலே தான் குடியேறினர், லெர்மாண்டேவ், துர்கனீவ், டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய் ஆண்டன் செகாவ், மாக்ஸிம் கார்க்கி போன்ற மாபெரும் இலக்கியகர்த்தாக்கள்.

புஷ்கின் எழுதியவை ஏராளம். 'காகஸஸில் ஒரு கைதி,' 'குதிரை வீரன்', 'பனியும் புயலும்', 'இஸ்பேட்ராணி', 'தளபதியின் மகள்', 'ட்யூப்ரோவ்ஸ்கி' முதலியவையும் அவனது படைப்புக்களே இவை எல்லாவற்றின் மூலமும் உலகம் கடைத்தேறுவதற்கே அறிவுரை கூறினான் அவன். இதனையே, 'உண்மையாகவே கூறுகிறேன். ரஷ்யா தனக்கென ஒரு செய்தியை உலகிற்கு விடுக்கிறது. உலக சமுதாயம் கடைத்தேற அறிவுரை செய்யும் சக்தி ரஷ்யாவுக்கு உண்டு. அந்த மகத்தான சக்தியின் மகத்தான பிரதிநிதி புஷ்கின்...' என்று 1880-ம் ஆண்டு நடைபெற்ற புஷ்கினது நினைவுநாள் விழாவில் பேசிய நாவலாசிரியன் டாஸ்டாவ்ஸ்கி கூறினான்.

வாலிபப் பருவத்தின் இன்ப துன்பங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து அப்பருவம் தாண்டி நிம்மதியாக அவை குறித்தெல்லாம் எழுதும் வாய்ப்பின்றித் தனது முப்பத்தெட்டாம் வயதிற்குள் வாழ்வின் முடிவிற்குச்சென்று விட்ட அவன், நீண்டகாலம் வாழ்ந்திருந்தால் இன்னும் ஏராளமான எண்ணக் கருவூலங்களை உலகுக்கு அளித்துத் தன்னையும் ரஷ்ய இலக்கியத்தையும் மேலும் புகழ்பெற்றவையாக, முன்மாதிரிகளாக, வழிகாட்டிகளாக அமைத்திருப்பான் என்பது திண்ணம்.

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு அலுவலகம்

திருச்சியில் 'மே' திங்களில் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கென 1-2-56 முதல் தனியாக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

மாநாடு சம்பந்தமாகக் கடிதம் எழுதும் தோழர்கள் இனி கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதவேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

அலுவலக நேரம் : காலை 9 to 1 மாலை 3 to 7.

செயலாளர்,
தி. மு. கழக 2-வது மாநில மாநாடு,
நெ. 9, கிலேதார் தெரு,
தெப்பக்குளம், திருச்சி.

இது நாகமுத்தையா 'மனைவிக்கு'......எழுதும் மூன்றாவது கடிதம். இக்கடிதத்திற்கும் மனைவியின் இடத்திலிருந்து பதில் எழுதுவோர் விரைவில் எழுதுக. இலக்கிய எடுத்துக் காட்டு இன்றியமையாதது.

நாகமுத்தையா எழுதிய மனைவிக்கு......இரண்டாவது கடிதத்திற்கு மனைவியின் இடத்திலிருந்து கணவர்க்கு எழுதியிருக்கிறார் பு. மா. தமிழ்மணி.

கடிதம் 3

மனைவிக்கு...

— நாகமுத்தையா —

அன்புக் கமலாவிற்கு,

உன் மூன்றாவது கடிதமும் வந்தது. குற்றவாளியைக் கூண்டிலே நிறுத்திக் குற்றப் பத்திரிகை வாசிக்கும் சர்க்கார் தரப்பு வக்கீலைப்போல வரிவரியாகக் குற்றஞ்சாட்டி எழுதி இருக்கிறாய். நான்தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டு விட்டேனே! அதற்குரிய தண்டனையையுந்தான் அனுபவித்து வருகிறேனே. நீ சொல்லித்தானா நான் என் குற்றங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்? கைப்புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவை இல்லை, என் கண்மணியே.

'உங்களைக் கண்களினால் கண்டேன்; நெஞ்சத்தால் ஆசை கொண்டேன்; கைகளினால் மாலையிட்டேன். கருத்தால் மணவாளனுக்கிக்கொண்டேன். இவ்வளவு பெரிய தவறுதல்களுக்கு உரிய தண்டனையை கையோ, கருத்தோ, கண்ணோ அனுபவியாது என் உடல் அனுபவிக்கிறது; மேனி தளர்ந்து வாடுகிறது. பழி ஓரிடம்; பாவம் ஓரிடம்!' -என்று எழுதுகிறாய்.

அழகாக இருக்கிறது உன் அறிவின் விரிவு. குற்றவாளியை விட்டு விட்டுப் பிறிதொருவனுக்குத் தண்டனையைக் கொடுத்து அனுபவிக்கச் செய்வது மிகப் பெரிய அநீதிதான். இருந்தாலும் அவ்வநீதியைத் தவிர்ப்பதற்கு இப்போது என்னால் எதுவும் செய்ய இயலாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். இன்னொரு வேடிக்கையையும் பார்த்தாயா? தவறு செய்தவன் நான். ஆனால், தண்டனையை அனுபவிப்பதோ நாமிருவரும்; இதுவும் ஒரு வேடிக்கை தானே?

'வேசியை விட்டுவிட்டு நீங்கள் வெளியில் வருவதுகூட இல்லையாமே?' என்று நையாண்டி செய்கிறாய். 'தன் வீட்டு மாம்பழத்தைவிட அடுத்தவன் வீட்டுப் புளியங்காய் இனித்துக் கிடக்கும்' என்ற எண்ணம் மனிதர்களிடையே சர்வசாதாரணமாக இருந்துவருகிறது. 'மயில்போல மனைவி இருந்தாலும், மந்திபோல ஒரு வைப்பாட்டி வேண்டும்' என்று என் பாட்டி அடிக்கடி சொல்லுவதுண்டு. அது என் விஷயத்தில் உண்மையாகி விட்டது.

'நிழலின் அருமை வெய்யிலிலே நின்றறிமின்' என்றார்கள். அதில்தான் எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது! இந்தப் பாட்டை என் தமிழாசிரியர் கந்தசாமி வாத்தியார் ரசனை ஒழுகச் சொல்லிக் கொடுத்தார். நான் என்ன செய்தேன் தெரியுமா? பாட்டு முடிந்ததும் பந்தடிக்கும் மைதானத்திற்கு ஓடினேன். பத்துநிமிஷம் சுள்ளென்று எரிக்கும் சுடுமணலில் நின்றேன். பிறகு அடுத்திருந்த ஆலமரத்து நிழலில் நின்று பார்த்தேன். எவ்வளவு இனிமையாக இருந்தது தெரியுமா அந்த நிழல்? பாட்டின் முழுப்பொருளையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

வைப்பாட்டியின் சகவாசம் உன் மேன்மையை எனக்கு எடுத்துக் காட்டுகிறது. கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்து திரிந்த பேதமையை இப்போது எண்ணி வெட்கப்படுகிறேன்.

'தாசிகள் உறவால் நான் சீரழிந்து போனேன்' என்று நீ கருதுகிறாய். உண்மை என்ன தெரியுமா?- நான் தாசிகளின் உறவால் உன் மேன்மையை உணர்ந்து சீர்பெற்று வருகிறேன்!'

'நான் உங்களை எந்த உருவிலும் எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஊர்வந்து சேர முயற்சி செய்யுங்கள்' என்று கடிதத்தை முடித்திருக்கிறாய். என்னே உன் அன்பு? அன்பின் பெருமையை நான் இப்போதுதான் உணர்கிறேன். ஏன் தெரியுமா? நான் சில நாட்களுக்கு முன்னர் நலிந்த நிலையில் அந்த வேசியின் வீட்டிற்குப் போனேன். கையிலே காசு இருந்தபோது, என்னை ஒரு சேரக் கட்டிப்பிணைத்து இணைத்துக்கொண்ட பாதகி என்ன செய்தாள் தெரியுமா? நலிந்த என் உருவத்தைக் கண்டதும் நான் நாதியற்று விட்டேன் என்பதை உணர்ந்துகொண்டு விட்டாள். பரதேசிகூடச் சொல்லிவிடுவான் அப்போது என்னிடம் பைசா இல்லை என்ற உண்மையை! இதை உணர்ந்துகொள்ளவா அந்தத் தளுக்குக்காரியால் முடியாது? என்னைக் கண்டதுமே கண்களை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள். நான் பெயரிட்டு அழைத்தேன். வேண்டா வெறுப்போடு திரும்பிப் பார்த்தாள்.

'காசில்லாத உபோதிக்குக் காமம் ஒரு கேடா?' என்றாள். நான் என் மதியீனத்தை எண்ணி வருந்தி, அந்தக் காமாந்தகாரியின் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு வீடு திரும்பிவிட்டேன். நைந்த உள்ளத்தோடு நாலடியாரைப் புரட்டிப் பார்த்தேன். துன்பம் வந்து தொல்லை தரும் போது நான் புத்தகத்தில் நுழைந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ளுவது வழக்கம் என்பதைத்தான் நீ அறிவாயே?

நாலடியாரைப் புரட்டினேன். அதிலே ஒரு பாட்டு:-

அங்கண் விசும்பில் அமரர் தொழப்படும்
செங்கண்மால் ஆயினும் ஆகமன்-தன்கைக்
கொடுப்பதுஒன்று இல்லாரைக் கொய்தளிர் அன்னார்
விடுப்பர்தம் கையால் தொழுது.

இந்திரனானாலும் சரி, சந்திர சூரியனானாலும் சரி, கொடுப்பதற்கு என்று பொருள் கொண்டு வராவிட்டால் அந்தக் கோமளவல்லிகள் கூடுவது ஒழிந்து, கும்பிட்டு வழி அனுப்பிவிடுவார்களாம். எப்படி இருக்கிறது அவர்களின் பணத்தாசை பார்த்தாயா?

இத்தகைய படுகுழியில் வீழ்ந்தாலும் வீழ்ந்தேன்; பத்தினிகளின் அருமையை உணர்ந்துகொண்டேனே! பத்தரை மாற்றுத் தங்கமே! வருந்தாதே இதோ வந்து சேர்கிறேன்.

உன் அன்புள்ள,
மாவண்ணன்

கணவர்க்கு...

— பு. மா. தமிழ்மணி —

அன்பரே!

கைநழுவிக் கடலில் விழுந்த விலைமதிக்க முடியாத மணி மீண்டும் கிடைத்ததைப்போல் உணர்கிறேன் தங்களின் மடலைக் கண்டவுடன்! கண்ணப்பர் கூறியதைச் செவிமடுத்தவுடன் தணலில் வீழ்ந்தவளானேன். கடற்சுழற்சியில் சிக்கியவள்போலானேன்! உங்கள் கடிதம்தான் தோணியாக அமைந்தது! ஆறுதல் அடைந்தேன்! தேறுதல் கூறி என்னை இன்பக்குடிலுக்கு அழைத்துச் செல்ல இன்னும் எவ்வளவு நேரம் அத்தான்?

என் மனக்கடலில் எழும் இன்னல் அலைகளைத்தான் எழுத்தாக்கினேன். அலைகள் படைவீரர்கள் போன்று நின்றது என் குற்றமா அத்தான்?

சேற்றிலே சிக்கிய தாங்கள், எப்படியோ மீண்டும் கரையேறினீர்கள் என்ற தித்திப்பான செய்தியை எண்ணியவுடன் உள்ளத்தில் உவகை அருவி ஓடுகிறது! களிப்பால் கண்கள் குளமாகின்றன! புலியின் குகையிலே சிக்கிய தாங்கள் மீண்டும் மனிதராக வருவீர்களோ என என் மனம் இருட்டறையாக இருந்தபோது, "மீண்டேன், வந்து சேருகிறேன்" என்ற சொற்கள் ஒளியைத் தாங்கிய வண்ணம் வந்தன! வாழ்வில் ஒளிபெற்றேன்! எண்ணத்தின் எழுச்சியை-உள்ளத்து உவகையை-பெற்ற இன்பத்தை எப்படி எழுத்தாக்கிவிடுவேன்?" "அங்கோடு அகல..." என்று தொடங்கும் நாலடிச் செய்யுளின் உண்மையை இன்றாவது உணர்ந்தீர்களே எனக்களிப்பெய்துகிறேன்.

வேசியருடன் வாழ்வோர் இலவங்காத்த கிளிபோன்றோர்! இருட்குகையிலே இல்லாத கரும்பூனையைக் குருடன் தேடுவதுபோன்ற நிலைமையைத்தான் வேசியர் இடத்திலும் நிலையான அன்பைத் தேடுவோரும் அடைவர்! முள்வேலியின்மேல் விரித்துவிட்ட என் "பட்டுத்துணி" இயற்கை அன்னையின் அருட்காற்றால் அதனின்று விலகி என்னை நாடி வருகிறது என்ற செய்தி என் செவிதனிலே தேன்வந்து பாய்வதுபோல இருக்கிறது அன்பரே!

வேசியரின் வனப்பு-வண்ணக்காகிதப்பூ! இல்லக்கிழத்தியின் வனப்போ செடியில் பூத்தமலர்! வேசியரின் நட்பு-ஒருமுறை படித்தவுடன் வீசி எறியும் கதைப் புத்தகம் போன்றது! நரியின் அன்பைப் போன்றது! மின்னலைப் போன்றது! சீக்கிரமாக மறைந்துவிடும்-கண்ணையும் பறித்திடலாம்! ஆனால் மனைவின் நட்போ - நீரூற்றைப் போன்றது! அள்ள அள்ளக் குறையாது சுரக்கும் அதிசய பாத்திரம்-படிக்கப்படிக்கப் பொருள் தோன்றும் குறள் போன்றது!

சங்க இலக்கியத்தைப் பயின்ற தாங்கள்-காதலன் பிரிவால் காதலி வருந்தும் கட்டத்தை உணர்ந்த தாங்கள் எப்படி அத்தான் இவ்வளவு நாள் பிரிந்திருக்க மனம் வந்தது? இன்றிருக்கும் என்நிலை தாங்கள் அறிவீர்களா?

"வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல்,
ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல்,
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல், மயக்கம், சாக்காடு என்றுஅச்
சிறப்புடை மரபினவை......"

என்று ஒல்காப் புகழ் தொல்காப்பியர் புணர்ந்து பிரிந்த மாந்தர் தம் உள்ள நிலைமையை விளக்க வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக என் நிலைமை இலக்கியமாக இருக்கிறது!

அன்பரே! முன்பு பண்டை இலக்கியத்தைப் பயின்ற காலை இவை போன்ற கவிதைகள் ஆசிரியன் சொல்லடுக்குகள் என்று எண்ணினேன்! ஆனால் நான் பட்ட அனுபவத்தினால் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று உணர்ந்துகொண்டேன்! பண்டைக் கவிஞர்கள் விஞ்ஞான மனம் கொண்டவர்கள்! உள்ளதை உள்ளபடியே தெள்ளிய நடையில் அள்ளித் தந்த வள்ளல்கள்! பண்டைக்கவிஞர்கள் வாழ்க!

"வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கின் உண்மையை இன்று நன்கு உணர்ந்துகொண்டீர்களே அத்தான் அதுபோதும்! தங்கள் வரவுதான் எனக்கு மருந்து! வாடிய என் உடல் வளம்பெற உங்கள் மொழிதான் விருந்து!

அருவியின் சிலுசிலுப்பை உங்கள் சிரிப்பிலும், தேனின் சுவையை உங்கள் செந்தமிழ்ப் பேச்சிலும், "புறநானூற்றை" உங்கள் ஏறு நடையிலும், "அகநானூற்றை" உங்கள் உள்ளத்திலும், முகிற் கூட்டத்தை உங்கள் கருணையிலும், மயில் தோகையை உங்கள் உடற்கட்டிலும் கொண்டுள்ள என் அருமை அத்தானே! உங்களைக் கண்டு கூடி மகிழ என் உள்ளம் தவியாய்த் தவிக்கிறது! காற்றிலும் கடுகி வாருங்கள் அத்தான்! உங்களைத் தேடிக்கொண்டே இருக்கிறது என் கண்கள். என்னை நாடி ஓடி வருவார் என் அத்தான்! கதிரவன் எழுந்தவுடன் தாமரை கொஞ்சிப் பேசுகிறது! எழில் நிலவு வந்தவுடன் குமுதம் குமிழ் சிரிப்புக்காட்டி என்னைக் கேலி செய்கிறது! அத்தான்! இவைகளை நாணும்படி செய்ய விரைவில் வாருங்கள் அத்தான்!

இப்படிக்கு,
கமலா

வாழ வகுப்போம் வழி.

(புயல் நிவாரண வெண்பா)

புயல் நிவாரண வெண்பாப் போட்டிக்கு வெண்பா அனுப்பிய நேயர்கள் மிகப்பலர். ஆனால், அவர்களில் நாற்பத்திரண்டு பேர்தான் போட்டிக் கட்டணம் அனுப்பியுள்ளனர். திருப்பத்தூர் தோழர் சி. பி. சாமி, தான் அனுப்பிய மூன்று வெண்பாக்களுக்கு இரண்டு ரூபாய் வீதம் ஆறு ரூபாய்கள் அனுப்பியுள்ளார். துரை. மாணிக்கம் என்னும் புதுவைத் தோழர் பணம் அனுப்பியுள்ளார்; வெண்பா அனுப்பவில்லை. பணம் அனுப்பியதாக எழுதிய பல தோழர்கள் பணம் அனுப்பவில்லை; வெண்பா மட்டும் அனுப்பியுள்ளனர் நிற்க.

இந்தப் போட்டியில் முதற்பரிசுத் தொகை ரூ. 20ஐ அறந்தாங்கி அ. வேதாசலமும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ 10ஐ சென்னை சிவராமலிங்கமும் அடைகிறார்கள். பாக்கி ரூ 58 புயல் நிவாரண நிதியில் சேர்கிறது.

பரிசு பெற்ற வெண்பாக்களையும், பிரசுரிக்கத் தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியிடப்படும்.

★1 காமமிகு வெம்புயலன் கள்ளன் கடற்றுணையால்
பூமகளின் இல்லிற் புகுந்தனனே?-நீமனத்தன்
வீழப் பழிக்கிணற்றில் வென்றே நிலமங்கை
வாழ வகுப்போம் வழி.

—அ. வேதாசலம், அறந்தாங்கி.

★

★2 கோரப் புயலாலும் கொட்டு மழையாலும்
சேர விழுந்தார் செழுந்தமிழர்-நேராதார்
ஊழென் றொதுங்கிடினும் ஓயாது நாங்களெலாம்
வாழ வகுப்போம் வழி.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

புயற்கொடுமை ஆண்டவனால் போந்ததென்றே சும்மா
செயலொழித்துச் சொல்லுவதால் நட்டம்-துயிலுமாமோ
கூழைக் குடிப்போரும் கொஞ்சம் உதவியவர்
வாழ வகுப்போம் வழி.

—இரா. சிங்கப்பெருமாள், அகரப்பேட்டை.

★

ஓங்குபுயல் பேய்மழையால் ஊருயிர்உற் றாரிழந்து
தாங்காத் துயரால தவிப்பவரை-நாங்களினி
மாளவிடோம்! அம்மக்கள் மீண்டும், வளம்பெற்று
வாழ வகுப்போம் வழி.

—ப. அ. இசுமாயில், மேலப்பாளையம்.

★

செல்வம் அழிந்தாலென் சேயும் இழந்தாலென்
தொல்தமிழும் ஆழியுண்டு தாழ்ந்ததுவோ?-சேல்விழியே
சூழ்புயலால் நொந்தாலும் செந்தமிழர் தோள்கொடுத்தே
வாழ வகுப்போம் வழி.

—போ இராசகோபாலன், பாளையங்கோட்டை.

★

பகுத்தறிவுத் தோட்டத்துப் பந்தலின்கீழ் வாழ்வை
வகுத்துக் கொடுக்கின்றார் வள்ளல்-தகுதியாய்
வாழப் பொருளீட்டி வள்ளுவர்போல் இந்நாட்டில்
வாழ வகுப்போம் வழி.

அழகின் இருப்பிடமே ஆடுமலர்ச் செண்டே
உழவன் திருநாளில் உன்னைப்-பழச்சாற்றை
வாழப் பருகிடுவேன் வானத்துச் சித்திரமே
வாழ வகுப்போம் வழி.

சீட்டெழுதிப் போட்டுமவர் சீர்தூக்கி எங்கட்கு
நாட்டில் ஒரு தொழிலும் காட்டிலரே!-கூட்டமாய்
ஆழக் கடல்சென்று அன்றாடம் முத்தெடுத்து
வாழ வகுப்போம் வழி.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

ஒருமை நெறிபேசி ஓர்வஞ்சம் காட்டும்
கருணையிலா நேருவுளம் காட்டி-திருவிடத்தில்
சூழும் புயலால் துயருறுநம் சோதரர்கள்
வாழ வகுப்போம் வழி.

—சு. சுடலையாண்டி, பி. எஸ்சி. செங்கோட்டை.

★

எண்ணற்ற இன்னலினை ஏற்றுப் புறங்கண்டு
பண்புற்ற தென்னவர்தம் பண்பறிந்தும்-கண்ணற்ற
ஆழ்கடலின் பேய்க்காற்றின் அல்ல(ல்) அறுத்தின்றே
வாழ வகுப்போம் வழி.

—மண்க்கரை-அம்பலவாணன், அயன்வரம்.

★

வெள்ளத்தால் வன்புயலால் வீடும் பயிர்ப்புலமும்
பல்லோர் இழந்தார் பிழைப்பற்றார்-தொல்லையொடு
ஏழ்மைப் பிணியுழன்றார் இடர்தீர்ந் தவருலகில்
வாழ வகுப்போம் வழி.

—குகன்குருசாமி, கமுதி.

★

ஒன்றுபடு வோம்நாம் உழைப்போம்நம் நாட்டிற்கு
நின்றே விளக்கிடுவோம் நேர்மையை-மன்றுதனில்
தோழர்காள் வாரீர் துயரின்றி எல்லோரும்
வாழ வகுப்போம் வழி.

—எஸ். வாசுதேவனார், திருநல்லார்.

★

சாதிப் புயலும் சதுர்மறை வெள்ளமதும்
பாதியிலே வந்தோர் பரப்பியது-நீதிபெற
வேழமாம் எம்காஞ்சி வீரர்தம் பாதையில்
வாழ வகுப்போம் வழி.

—மு. தமிழரசு, திருப்புத்தூர்.

★

ஈழத்தை விட்டுவரும் எந்தமிழர்; வெம்புயலால்
பாழடைந்து அல்லலுறும் பைந்தமிழர்;-மேழியினால்
வாழ்வுயரா நல்லுழவர் இன்னவர்கள் நன்முறையில்
வாழ வகுப்போம் வழி.

—ஏ. கே. கண்ணன், திருச்சி.

★

கடுமழையால் வன்புயலால் கன்னித் தமிழர்
படுந்துன்பம் பாரீர் அன்னார்-நெடுந்துயரம்
தாழத் தமிழகத்தில் தக்கன செய்தேதான்
வாழ வகுப்போம் வழி.

—கு. ஆ சேது, குருவிகுளம்.

★

தாளாண்மை நன்குடைய தூய்தமிழர் பற்பலரை
மாளத்தான் செய்தார் வடநாட்டார்-நாளைகாள்!
சோழ வளநாட்டில் சூளுரைக்கும் மாநாட்டில்
வாழ வகுப்போம் வழி.

—"உறந்தை ஒளிமணி" புதுக்கோட்டை.

★

தேங்கனிந்த செந்தமிழா தேம்புபஞ்சைச் சேய்களுக்குப்
பாங்குணவு கல்வியுடைப் பண்பளித்துத்-தீங்கனைத்தும்
வீழ வகுப்போம்! விழித்துணர்வு பெற்றுலகு
வாழ வகுப்போம் வழி

—மு. ல. பழநிச்சாமி, கோட்டைத்துறை.

★

பண்பாட்டில் மிக்குற்ற பைந்தமிழர் நாடின்று
புண்பட்டு ஏங்குதே பூந்தமிழா-கண்ணுற்றுத்
தாழவே தீச்செய லத்தனையும், செங்குறளால்
வாழ வகுப்போம் வழி.

—அரும்பொன், விராச்சிலை.

★

சோழர் புயல்நலிவும் சோம்பர் வடவரோடு
ஈழ(வ)ர் பகைப்புயலும் இல்லாக்கிச்-சூழலிடைத்
தாழா(து) திராவிடர்நாம் தன்மானத் தோடென்றும்
வாழ வகுப்போம் வழி.

—த. மு. கிஷ்ணப்பன், தா. அம்மாப்பேட்டை.

★

ஆழக் கடலும், அரக்கப் பெருவளியும்,
பாழாக்கித் தென்னாட்டை வாட்டியதால்-தோழர்காள்!
வாழத் துடிதுடிக்கும் மக்கட்கு நல்நிதி
வாழ வகுப்போம் வழி.

—வெ. கு. வெங்கடேசன், சிதம்பரம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், எ. எஸ். என். அச்சகம். 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.